செப்டம்பர் - 2011

திருவள்ளுவர் ஆண்டு 2042

செந்தமிழ்

தொகுதி : 55
பகுதி : 11

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்

செந்தமிழக் கல்லூரிச் செயலாளரும்,

தமிழகத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்புத்

தலைவருமான

திரு. இரா. குருசாமி பி.ஏ., அவர்கள்

✻ தமிழ்ச்செம்மல் விருது ✻

பெற்றமைக்குப் பாராட்டுப் பா.

செந்தமிழ் இதழ், "தமிழ்ச் செம்மல் விருதினைக் கரந்தைத்
தமிழ்ச்சங் கத்துநூற் றாண்டினில்
பெற்றார் மதுரைத் தமிழ்ச்சங் கத்தின்
நற்செந் தமிழ்க்கல் லூரிச் செயலர்,
தமிழகத் தமிழ்ச்சங் கங்கள் கூட்டமைப்பின்
தலைவர், திருநிறை **இரா. குருசாமி**
என்னும் செய்தியை ஏந்தி வந்தது !
பொன்னேர் பெருமை ! போற்றுவோம் ! வாழ்த்துகள் !
அருமைத் தமிழ்ப்பணி தொடர்கவே !
அருள்இறை அருளினால் வளமுடன் வாழ்கவே.

அன்புடன்

புலவர் சி. பாண்டுரங்கன்

ஆம்பூர் - 635 802

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 55 திங்கள் இதழ்

பகுதி : 11 திருவள்ளுவர் ஆண்டு 2042

செப்டம்பர் 2011

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 6000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

பொருளடக்கம்

தலைப்பு	ஆசிரியர்	பக்கம்
மாற்றுத் திறனாளிகள்	புலவர் ஆறுவிரல் ஐம்பொறி	4
எஸ். இராமகிருஷ்ணன் சிறுகதைகளில் உத்திகள்	குண. ஆறுமுகம்	7
மறைமலையடிகளின் சங்க இலக்கிய ஆராய்ச்சி உரைகள்	ப. கனிதா	13
சிலம்பில் ஒலிக்கும் பெண்ணியப் பரல்கள்	இரா. மோகன்குமார்	19
திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறிமுறைகள் - தொடர்	சித்தாந்த நன்மணி முனைவர் கா. அரங்கசாமி	28
கல்லாடம் சுட்டும் இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில்	முனைவர் பி. ஆறுமுகம்	33

இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

அன்புடையீர்,

செந்தமிழ் இதழ் வாசகர்களுக்கு வணக்கம். செப்டம்பர் மாத செந்தமிழ் இதழ் ஏழு கருத்துப் பெட்டகங்களைத் தாங்கித் தங்கள் கைகளில் தவழ்கிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு மனம் இரங்க வேண்டும் என்ற கருத்தைப் பண்டைய தமிழ் இலக்கண இலக்கியங்கள் எப்படியெல்லாம் வெளிப்படுத்தியிருக்கின்றன என்று ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் நுட்பமாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

சிறுகதைகளில் காணப்படும் உத்திகளைச் சிறுகதை எழுத்தாளர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களின் கதைகளில் இருந்து அண்ணாமலைநகர் ஆறுமுகம் அவர்கள் தன் ஆய்வுக்காகத் திரட்டியதை நமக்கும் சுவைக்கத் தந்திருக்கிறார். மறைமலையடிகளின் சங்க இலக்கிய ஆராய்ச்சி உரைகளை நாம் அறிந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பை ப. கனிதா அவர்கள் தந்திருக்கிறார். தொடர்பிழைகளைத் தவிர்க்க இதழாசிரியர் சிரமப் பட வேண்டியிருந்ததைக் கட்டுரையாளர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம்.

மதுரைத் தமிழ்ச்சங்க நற்பணிகளைக் கவிதை வடிவில் பாண்டுரங்கன் அவர்கள் தந்து தமிழ்ச்சங்கத்தைப் பெருமைப்படுத்தியிருக்கிறார். “சிலம்பில் பெண்ணியப் பரல்கள்” பெண்மைக்கு உண்டான “புரைதீர் கற்பின்” பொற்போடு படைக்கப்பட்டுள்ளது. பேராசிரியரும், பெரும் புலவருமான முனைவர் கா. அரங்கசாமி அவர்களின் “திருக்குறளின் தோற்றக்களம்” எனும் தொடர் நுண்மாண்நுழைபுலத்தோடு அமைந்து தமிழ்ப் புலவர்களுக்கு நல்விருந்தளிக்கிறது. மதுரையில் அமைந்துள்ள இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோவிலுக்குள் இவ்வளவு இலக்கிய நன்மைகளா ! என வியப்பில் ஆழ்த்துகிறார் முனைவர் ஆறுமுகம் அவர்கள். இம்மாத இதழ்க் கட்டுரைகளை இலக்கியச் சித்திரமாக வாசகர்களுக்கு வழங்குவதில் பெருமை அடைகிறோம்.

முனைவர் க. சின்னப்பா

இனி நீங்களும் இதழும்....

மாற்றுத் திறனாளிகள்

புலவர் ஆறுவிரல் ஐம்பொறி
விழுப்புரம்

இயல்பான மனிதர்குரிய உடல், உள்ள அறிவுத்திறனில் குறைபாடு உள்ளவரை மாற்றுத் திறனாளிகள் என்று சுட்டலாம், மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் ஆகிய ஆறில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் குறைபாடு உள்ளவரை மாற்றுத் திறனாளிகள் என்று கூறுவதும் பொருந்தும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் மாற்றுத் திறனாளிகளை ஊனர் என்றும் இயலாதவர் என்றும் அழைத்தனர். இவ்விரு பெயர்களும் இவர்கட்கு எவ்வகையிலும் பொருந்தாதக் காரணத்தால் 'மாற்றுத் திறனாளிகள்' என்ற பொருத்தமான பெயரைச் கொண்டு இப்போது இவர்களை அழைக்கின்றோம். மாற்றுத்திறனாளி என்ற பெயர் இவர்கட்கு எப்படிப் பொருந்துகிறது என்பதைக் காண்போம்.

ஒரு பொறியில் குறைபாடு உள்ளவர் மற்ற பொறிகளைக் கொண்டு அக்குறைபாட்டை நீக்கிக்கொள்வர். கண்ணில் குறைபாடு உள்ளவர், காலடி ஒலியைச் செவி வழி கேட்டு கண்ணின் குறைபாட்டைப் போக்கிக்கொள்வர். செவியில் குறைபாடு உள்ளவர், பேசுபவரின் உதடுகள் அசைவதைக் கண்ணால் கண்டு செவியின் குறைபாட்டைப் போக்கிக்கொள்வர். அதனால் இவர்களை மாற்றுத்திறனாளிகள் என்று அழைப்பதே பொருந்தும்.

செந்தமிழ் மொழி இலக்கியங்கள், ஐம்பொறிக் குறைபாடு உடையவர்களை மாற்றுத் திறனாளிகள் என்று கூறுவதுடன் நோயுற்றவரையும், ஏழையரையும், குள்ளரையும், சாகும் தருவாயில் இருப்பவரையும், அனாதையரையும், அறிவில்லாதவரையும், மனநோயாளிகளையும், அலிகளையும், கைவிடப்பட்டோரையும், முதியோர்களையும் கூட மாற்றுத்திறனாளிகளாகவே பகர்ந்துள்ளன.

இவ்விலக்கியங்கள், மாற்றுத்தினாளிகளுக்கு உதவிகள் செய்யவேண்டும், உணவிட வேண்டும், மதிப்பளிக்க வேண்டும், சிறப்பளிக்க வேண்டும் என்று கூறுகின்றன. இவர்களை எந்த வகையிலும் இழிவாகக் கருதக்கூடாது என்றும் கூறுகின்றன. இக்கருத்துக்களை இலக்கியங்களில் காண்போம்.

1. மாற்றுத் திறனாளிகளுக்கு மனம் இரங்கி பொருள் வழங்கவேண்டும் என்பதைப் பொருட்டொகை நிகண்டு (ப - 9)

இடைப்படு தானம் ஆதுலர் குருடர்
மாதர் முதல்பிறர் சிறுமையைப் பற்றி
மனமது இரங்கியே வழங்கல் என்ப

என்று கூறியுள்ளதை அறிந்து மகிழலாம். மூவகை தானங்களுள் மாற்றுத் திறனாளிகளுக்கு அளிக்கப்படும் தானம் இடைப்படு தானம் ஆகும். இதை ஊனதானம் என்றும் கூறுவர்.

2. கைகேயியின் தோழி மந்தரை என்பாள் கூனி என்னும் மாற்றுத் திறனாளினியாக இருந்தாள் என்பதை கம்பராமாயணம் கூறுகின்றது. மந்தரை மாற்றுத் திறனாளினியாக இருந்த காரணத்தால் கைகேயி மந்தரையின் பேச்சுக்கு மதிப்பளித்தாள்.

3. மாற்றுத் திறனாளிகள் எந்த வகையிலும் இழிந்தவர் அல்லர் என்பதை கலித்தொகை 94ல் 28ஆம் அடி

இழிந்ததோ? கூனின் பிறப்பு

என்று கூறுவதை அறிந்து மகிழலாம்.

4. அரியது கேட்ட வடிவேலனுக்கு ஔவையார் நான்கு மாற்றுத் திறனாளிகளை அறிமுகப்படுத்துகிறார். இதனை

மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது.

என்று அவர் கூறியதன் வழி பேடு என்னும் அலிகளும் மாற்றுத்திறனாளிகள் வரிசையில் உள்ளதை அறியலாம்.

5. *கூனும் குறளும் ஊமும் கூடிய*
குறுந்தொழில் இளைஞர் செறிந்து சூழ்தர

என்ற சிலப்பதிகாரம் 20 - வழக்குரை காதை 17, 18ஆம் அடிகளின் வழிகூன், குள்ளம், ஊமை ஆகிய மூன்று மாற்றுத் திறனாளிகளை அறியலாம். இதன்வழி இளைஞர்களும் மாற்றுத்திறனாளிகளாக இருந்தனர் என்பதும் அவர்கள் சிறுதொழில் செய்து வாழ்ந்தனர் என்பதும் தெரிகின்றது.

6. *கால்இல்லார் கண்இல்லார் நாஇல்லார் யாரையும்*

பால்இல்லார் பற்றிய நூல்இல்லார்

என்ற ஏலாதி 36ஆம் செய்யுளில் நூல்இல்லார் என்பது அறிவில்லாரைக் குறிக்கிறது. அறிவில்லார் என்பது மனநோயரையும் குறிக்கும்.

7. *காணார் கேளார் கால்முடப் பட்டோர்*

பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்

யாவரும் வருகவென்று இசைந்துடன் ஊட்டி

என்ற மணிமேகலை - ஆபுத்திரன் திறம் அறிவித்த காதையில், 91, 9, 93ஆம் அடிகளின் வழி கைவிடப்பட்டோர், நோயுற்றவர் ஆகிய இருவரும் மாற்றுத்திறனாளிகள் என்பதையும் அவர்களை வருகவென்று அழைத்து உணவிட்டதையும் அறியலாம்.

8. *போற்றுவார் இல்லார் போகு உயிரார்*

கண்கெட்டார் காலிரண்டும் இல்லாதார்

ஆழ்ந்து நெகிழ்ந்து அவர்க்கீந்தார் வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து.

என்ற சிறுபஞ்சமூலம் 76ஆம் செய்யுளின் வழி அனாதையர், சாகும் தருவாயில் உள்ளவர் ஆகிய இருவரும் மாற்றுத்திறனாளிகள் வரிசையில் உள்ளதை அறியலாம். இவர்கட்கு கொடுப்பவர் மகிழ்ந்து வாழ்வர் என்பதையும் அறியலாம்.

9. *பொறியின்மை யார்க்கும் பழியன்று. திருக்குறள் – 618.*

இக்குறட்பாவில் 'பொறியின்மை' என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளின் குறைபாடுகளைக் குறிக்கிறது. எனவே இக்குறட்பா ஐந்து மாற்றுத்திறனாளிகளைக் கூறுகிறது.

செவிடாய் இரு, குருடாய் இரு, ஊமையாய் இரு.

அருமையான இம்மூன்று கருத்துக்களை நாலடியார் 159ஆம் செய்யுள் அறைகிறது. வியப்பு ஆனால் உண்மை. 'பிறர் இரகசியம் பேசும்போது செவிடாய்' இரு. பிறர் மனைவியைப் பாராது குருடாய் இரு. பிறரைக் காணாதபோது அவர் மீது குற்றம் கூறாது ஊமையாய் இரு. இப்படி இருப்பவற்கு அறத்தைப் பற்றிக் கூறவேண்டா' என்பதே அச்செய்யுளின் கருத்து. இக்கருத்தைக் கடைப்பிடித்து வாழ்வோம். மாற்றுத் திறனாளிகட்கு இயன்ற உதவியைச் செய்வோம்.

எஸ். இராமகிருஷ்ணன் சிறுகதைகளில் உத்திகள்

குண. ஆறுமுகம்
அண்ணாமலை நகர்

படைப்பாளி தனது படைப்புகள் அனைத்தும் வெற்றிபெற வேண்டும் என்ற முனைப்புடன் தான் எழுதத் தொடங்குகிறான். அதற்காக அவன் பல சோதனைகளைத் தாண்டிய பிறகே, அந்தச் சாதனையை நிகழ்த்த முடிகிறது. அச்சோதனைகளில் ஒன்று அவன் தனது படைப்பில் வாசகனை ஈர்க்கக்கூடிய வகையில் எத்தகைய புதிய முறைகளை கையாண்டுள்ளான் என்பது ஆகும். இந்தப் புதிய முறைகளையே உத்தி என்று கூறுகின்றோம். ஒரு படைப்பாளியின் வெளிப்பாட்டுத் திறன்களில் இவை குறிக்கத்தக்கவையாகவும் திகழ்கின்றன. படைப்பின் தரத்தையும் ஆழத்தையும் அளவிடச் சிறந்த கருவியாகவும் கருதப்படுகின்றன. எஸ். இராமகிஷ்ணன் சிறுகதைகளில் உத்திகளின் செல்வாக்கையும் அதன் தனித் தன்மையையும் ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

உத்தி – சொற்பொருள் விளக்கம்

படைப்புத் துறையில் நிலவி வருகின்ற உத்திமுறைகள் பல்வேறு கோணங்களில் மதிப்பிடப்பட்டுள்ளன. இலக்கியத் தொண்டாற்றியோரும், தரவுகள் வழித் திறனாய்வு முடிவுகளைத் தருவோரும் உத்திக்கான பொருள் வரையறையையும், கருத்து விளக்கங்களையும் பலவாறாக வழங்கியுள்ளனர். தொல்காப்பியர் குறிப்பிடும் 32 வகையான உத்திகளை,

ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்

என்னும் நூற்பா வழியும்,

நன்னூலார் இயற்றியுள்ள உத்திமுறைகளை,

''நுதலிய புகுதல்''

என்னும் நூற்பா வழியும் அறியலாம்.

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி,

''தனித்துறை முறைநுட்பம்; கலைப்பாணி, கலை நுணுக்கத் திறம்; கலை நுணுக்கக் கூறு; இயல் நுட்பக் கூறு; தொழில் துறை நுட்பம்; தனிச்சொல் முறைத்திறம்''

எனப் பொருள் தருகிறது.

வெப்ஸ்டர் அகராதி

எந்தக் கலையையும் நேர்த்தியாகப் படைத்துக் காட்டக் கையாளப்படும் நெறிமுறைகள் உத்தியாகும் என வரையறை செய்கிறது. படைப்பாளன் தான் சொல்லவரும் கருத்துக்களைக் கற்பவர் மனதில் எளிதில் பதியச் செய்யவும், விளங்க வைக்கவும், கையாளும் முறைகள் உத்தி எனவும், ஒரு கலைப்படைப்பை உருவாக்குவதற்குப் படைப்பாளன் மேற்கொள்ளும் நுண்ணிய அணுகுமுறை உத்தி எனவும் உத்தியை மதிப்பீடு செய்துள்ளனர்.

உத்தியின் பயன்பாடு

படைப்பாளர் தான் சொல்ல எடுத்துக் கொண்ட வடிவத்தை எங்ஙனம், கலையாக்குகிறான். கதைப்பொருளை எவ்வாறு வளர்த்துச் சொல்கிறார் என்பதை அறிய உத்திகள் துணைபுரிகின்றன. மேலும் ஒரு கலைப்படைப்பை மதிப்பீடுவதற்கும், அழுத்தமாகப் படைப்பதற்கும், விரிவான அர்த்தங்களை சொல்வதற்கும், உத்திகள் பயன்படுகின்றன.

சிறுகதையில் கரு, பாத்திரங்கள் அமைந்திருந்த போதிலும் வெளிப்பாட்டுப் பாங்கு முழுமை பெறவில்லை என்றால் படைப்பு உருப்பெறாது. எனவே, படைப்பைப் பாங்குடையதாய் ஆக்கவல்ல ஆற்றல், உத்திமுறைக்கே உண்டு என்பர்.

அறிஞர்களின் கருத்துக்கள்

பொற்கோ - ''எல்லாத் துறைகளுக்கும் உத்திகள் பொருந்தும் என்று சொல்ல முடியாது. உத்திகள் சில துறைகளுக்குப் பொருந்தி வரலாம். வராமலும் போகலாம்'' என்கிறார்.

சி. மலைமறை - ''ஓர் இலக்கியப்படைப்பில் வழங்க விரும்பும் செய்தி அல்லது அடிக்கருத்தைத் தவிர ஏனைய அனைத்தும் உத்திமுறைகளால் உருவாக்கப்பட்டவையே'' என்பர்.

"என்ன சொல்கிறோம் என்பதைவிட எப்படிச் சொல்கிறோம் என்பதே உத்தியின் பாற்பட்டதாக அமைகிறது. அதுவே வாசகனைக் கவர்ந்திழுக்கும் முதல் கூறாகவும் அமைகிறது. கருத்தை வெளிப்படுத்தும் முறையில் குறை இருந்தால் படைப்பும் குறைக்கூறானதாகிறது" என்று ஏ.ஆர்.ஏ சிவகுமரன் குறிப்பிடுகின்றார்.

உத்தியும் சிறுகதையும்

சிறுகதை உருவாக்கத்தின்போது வெளிப்படுகின்ற உத்திகள் பல வகையாக பகுத்து ஆராயப்பட்டுள்ளன. உத்திமுறையின் பொதுத் திறன்களாகத் தொடக்கம், முடிவு, பின்னோக்கு, உரையாடல், முன்னிலை, நனவோடை, முரண், மடல் வரைதல், பாத்திரங்களின் கூற்று, குறிப்புணர்த்தல், கனவுநிலை, நாட்குறிப்பு வழங்குதல், எதிர்ப்பார்ப்பைப் புலப்படுத்துதல், நடந்த நிகழ்ச்சியை ஒளிவின்றி வரைதல், நாடகஅமைப்பு, அங்கதம், மேற்கோள் ஆட்சி, நகைச்சுவைப் பண்பு போன்றவற்றைக் குறிப்பிடுவர்.

தொடக்கம்

ஒரு சிறந்த தொடக்கத்தைக் கொண்டுள்ள சிறுகதையே வெற்றி பெறுவதைப் படைப்புலகில் அறிய முடிகிறது. தொடக்கம் என்பது கதையின் தொடர் ஓட்டத்திற்கும், கதையின் பல்வேறு திருப்பங்களுக்கும் தளமாக அமையும். இவ்வுத்தியைப் பின்பற்றும் கதைகள், நிலைத்த புகழையும், நீண்ட வரலாற்றையும் பெறுவதைப் பல்வேறு புகழ்பெற்ற கதைகள் மெய்ப்பித்துள்ளன.

சிறுகதையின் தொடக்கம் சுவாரசியமாகவும், கதையின் போக்கை ஒருவாறு கூறுவது போலவும் அமைந்திருக்க வேண்டும் என்பர். கதையின் மையத்தைச் சுற்றியே கதையின் தொடக்கம் அமைதல் வேண்டும் என்பர்.

"கதையின் தொடக்கமே கருவை இன்னது என்று

காட்டுவதாக அமைய வேண்டும்"

'கழுவேற்றம்' எனும் சிறுகதையில் "பனகல் சாலையில் பஸ் வளைந்த திரும்பும் போது சட்டென இறங்கி விட்டான்" என்று தொடக்கத்தைச் செம்மையாகப் படைத்துள்ளார்.

முன்னிலை உத்தி

கதையின் தொடக்கத்திலோ, இடையிலோ, முடிவிலோ, வாசகரோடு தனிப்பட்ட முறையில் உறவாடுகின்றார். இந்த முன்னிலை உத்தியைப் பயன்படுத்தி ஆசிரியர் பல இடங்களில் படைத்துள்ளார்.

பிக்குகளில் இளையவனான யசன் துவராடை உடுத்திய போது வசீகரம் கலையாதவனாக இருந்தான். அவன் ஒருபோதும் யாசகம் கேட்டுக் குரல் தருவதேயில்லை என்று முன்னிலை உத்தியை அழகுறப்படைத்துள்ளார்.

இந்த முறையில் கதை மாந்தரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளையும், சொந்த எண்ணங்களையும், உயர்வுகளையும் கூட ஆசிரியர் தாராளமாக எழுத முடியும். இந்த நோக்கு நிலையை எல்லாம் அறிந்த நோக்கு நிலை என்பர் என்று ச. சுந்தரவல்லி குறிப்பிடுகின்றார்.

உரையாடல் உத்தி

படைப்பாளர்கள் கதை மாந்தர்கள் உரையாடுவது போன்று படைப்பது உரையாடல் உத்தி ஆகும். இத்தகைய உரையாடல் உத்தி, சுவைப்போர் நேரில் ஒரு நிகழ்வைக் காண்பது போன்ற உணர்வைத் தோற்றுவிக்கிறது.

நேற்றிலிருந்து இந்த நதியிடம் என்னதான்
பார்த்துக் கொண்டிருக்கிறார் யசா....?
கடக்க முடியாத இந்த நதியின் உள்ளே
புதைவுற்ற காட்சிகள் என்மீது பற்றி எரிகின்றன
என்ன தெரிகிறது?
என் பால்யம் இந்த நதியின் அடியில்
ஓடிக்கொண்டிருக்கிறது

என உரையாடல் உத்தியை ஆசிரியர் அருமையாகக் கையாண்டுள்ளார்.

நனவோடை உத்தி

பால்யத்தில் நடந்த நிகழ்வுகளை எடுத்துரைக்கும் தன்மை நனவோடை உத்தி ஆகும். காலம், இடம் இவைகளில் பின்னணியில் நிகழ்ச்சிகளை முறையாகக் கூறாமல் உள் மனதின் எண்ணங்களை மொழிவது இம்முறையின் பாற்படும். நடந்ததை நினைக்கும் வகையை

நனவோடை என்று கூறலாம். அகவியல் போக்கில் கதை கூறும் முறையில் அமைந்த புதிய வளர்ச்சியாகும். கூறுகளின் வெளிப்பாட்டைப்பிளந்து மணியாகத் தரும் முயற்சியை நனவோடை என வரையறுக்கலாம் என்று கிருஷ்ணராசா குறிப்பிடுகிறார்.

'பால்யநதி' எனும் சிறுகதையில் யசன் வளர்ந்து வாலிபனாகி பல முறை இதே நதியைக் கடந்த போதும் பால்யத்தில் மறைந்த காட்சிகளின் மயக்கம் தீரவேயில்லை. நதி ஒரு மோதிரம் போல, தன் விரலைச் சுற்றி மட்டுமே வளையமிட்டு சுழன்று கொண்டிருப்பதற்காகவே யசனுக்கு இன்று வரை தெரிகிறது என்று எஸ். இராமகிருஷ்ணன் அற்புதமாகவும், அழகாகவும் நனவோடை உத்தியை கையாண்டுள்ளார்.

பின்னோக்கு உத்தி

கதையின் வடிவத்தை வரையறுப்பதற்கும், சுவைஞரின் ஈர்ப்பைப் பெறுவதற்கும் கதையில் பின்னோக்கு உத்தி வகுக்கிறது. சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் எழுத்து வன்மைக்கு இவ்வுத்தி பெரிதும் தளம் அமைகிறது.

ஒரு கதைக்கான பழைய நிகழ்ச்சிகளை நினைவுகூர வாய்ப்பளிப்பதும் பின்னோக்கு உத்தியாகும். இன்னைய திரைக்கதைகளிலும் சிறுகதைகளிலும் இப்பின்னோக்கு உத்தி வெற்றி பெற்று வருகிறது.

''நேற்றிரவு நிம்மதியான தூக்கமிருந்ததா? எனும்
சிறுகதையில் முதியவன் பகலை இரவாக
மாற்றிய தன் இளவயது இன்னும் அதே
அறையில் இருப்பதை திருப்பிப் பார்த்த
படபடப்பில் தலைகவிழ்ந்திருக்கிறான்''

என்று ஆசிரியர் பின்னோக்கு உத்தியை சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

கடித உத்தி

கதையில் இடம்பெறும் பாத்திரங்கள் தம்மால் நேரில் கூற முடியாத உணர்வுகளைக் கடிதங்கள் வாயிலாகப் புலப்படுத்தும் கடித உத்தி, கழுவேற்றம் எனும் சிறுகதையில்,

''ப்ரியத்துக்குரிய காதலன் ராஜீவுக்கு''

என்று கடித உத்திமுறையைக் கையாண்டுள்ளார்.

உலகம் ஒரு பெரிய எழுத்துக்கதை எனும் சிறுகதையில், பிரபவ வருடம்,

சித்திரை இரண்டாம் நாள்

முகாம், திருவாடுதுறை

தேவரீர் பண்டிதமணி துரைச்சாமி முதலியார் சமூகத்திற்கு தங்கள் அடிப்பொடியான் வலசை ஏகாம்பரநாதன் எழுதும் மடல் என்று கடித உத்தியைக் கையாண்டு சிறுகதையினைக் கவினுறப் படைத்துள்ளார்.

முரண் உத்தி

ஒரு குடும்பத்தில் இருவருக்கிடையே அல்லது இரண்டிற்கு மேற்பட்டவருக்கிடையே மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தால் முரண்பாடு என்று கூறுகின்றோம். ஆனால், இது குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் சமுதாயத்திற்கு உள்ளேயும் இம்முறை காணப்படுகிறது.

'மினர்வா சலூன்' எனும் சிறுகதையில் முரண் உத்தியை ஆசிரியர் அழகாகக் கையாண்டுள்ளார். "நான் ஒன்றும் உன் பெண்டாட்டியில்லை. உன் இஷ்டம் போல மிரட்டுவதற்கு, நீ எனக்குக் கொடுத்தது இரண்டு பிள்ளைகளும் சீக்கும் தான்" என்று எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் அருமையாக முரண் உத்தியைக் கையாண்டுள்ளார்.

நிறைவாக

இதுவரை உத்திகள் பற்றிய விளக்கத்தையும், உத்திகள் என்னென்ன என்பதையும், அந்த உத்திகளைச் சிறுகதைகளில் எந்த வகையில் பயன்படுத்தி உள்ளார் என்பதையும் கண்டோம். முறையான உத்திகளைப் பயன்படுத்தினால் மட்டுமே ஒரு கதை சிறந்ததாகக் கருதப்பட்டு அனைவராலும் படிக்கக்கூடியதாக அமையும். எனவே, ஆசிரியரின் வெற்றி அவர் கையாண்டுள்ள உத்திகள் மூலம் கிடைக்கும்.

மறைமலையடிகளின் சங்க இலக்கிய ஆராய்ச்சி உரைகள்

ப. கனிதா
அண்ணாமலை நகர்

முன்னுரை

மறைமலையடிகளின் இலக்கிய ஆராய்ச்சி உரை நூல்கள் 8 இடம்பெறுகின்றன. அவை முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, குறிஞ்சிப்பாட்டாராய்ச்சியுரை, திருக்குறள் ஆராய்ச்சியுரை, சிவஞானபோத ஆராய்ச்சி, திருவாசக விரிவுரை, தமிழ்விடு தூது, சாகுந்தல நாடக ஆராய்ச்சி எனும் எட்டு நூல்களாகும். இவற்றில் முல்லைப் பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, குறிஞ்சிப்பாட்டாராய்ச்சி என்ற 3 நூல்களும் சங்க இலக்கிய நூல்களாகும். இதில் குறிஞ்சிப் பாட்டாராய்ச்சி கையெழுத்துப்படி என்பதால் நூலாக வெளிவரவில்லை. ஆகவே, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை மட்டுமே இக்கட்டுரை ஆராய்கின்றது.

முல்லைப்பாட்டு ஆராய்ச்சி - ஓர் அறிமுகம்

முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை 1903 ஆம் ஆண்டு வெளிவந்தது. மறைமலையடிகள் தனது மாணவர்களின் விருப்பத்திற்கிணங்க இந்நூலினைப் படைத்துள்ளார். இந்நூலின் பாட்டின் இயல்பு, பழந்தமிழ்ப் பாட்டின் சிறப்பியல்பு, பாட்டின் வரலாறு, பொருட்பாகுபாடு எனும் 12 தலைப்புகளால் சிறப்பாக இந்நூலை ஆக்கியுள்ளார்.

பட்டினப்பாலை ஆராய்ச்சி - ஓர் அறிமுகம்

முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை போலவே பட்டினப்பாலை ஆராய்ச்சி நூலும் 1903 ஆம் ஆண்டு வெளிவந்தது. மாணவர்கள் விருப்பத்திற்கு கிணங்க இந்நூலினைச் செய்துள்ளார். பாட்டினியல்பு, பொருட்பாகுபாடு, பாகை, வாகை, பாட்டின் வரலாறு, ஆக்கியோன் வரலாறு என 12 தலைப்புகளில் இந்நூலினைப் படைத்துள்ளார்.

சங்க இலக்கிய ஆராய்ச்சி நூல்களில் வெளிப்படும் மறைமலை அடிகளின் ஆய்வுத்திறம்:

இலக்கிய ஆராய்ச்சி (பட்டினப்பாலை)

"பட்டினப்பாலையென்னும் இவ்வருமருந்தன்ன நூலை எழுதிய உருத்திரங்கண்ணனார் என்னும் நல்லிசைப் புலவர் இதன்கண் இருபது உவமைகள் காட்டியிருக்கின்றார். இவ்வுண்மைகளை ஓரிடத்து ஒரு சேரக் கூறாது பொருள்களைக் கிடந்தவாறே சொல்லிக் கொண்டு போம்வழி இடையிடையே சுவை வேறுபடுத்திக் கற்பார்க்கு உணர்வெழுச்சி உண்டாகுமாறு இனிதே அமைத்துள்ளனர்"

இருக்கும் பொருள்களைப் பற்றி இருந்தவாரே கூறினால் சுவையாக இருக்காது என்றும், அதனால் படிப்போரின் மன உணர்வைக் கவர்தல் முடியாது என்றும் நினைத்து உலகியல் பொருள்களை இயற்கை அழகு உள்ளவை, இயற்கை அழகு அற்றவை என இரண்டாகக் குறிப்பிட்டுள்ளார். இச்செய்யுளில் கூறுகையில் அழகான சிறந்த பொருள்களைக் கூறும்போது மக்கள் மன உணர்வைக் கவரும் வகையில் தன்மை நவிற்சியும், இயற்கையழகுப் பொருள் இல்லாமல் பிறவற்றைக் கூறும்போது அதனை அழகுறகாட்டியும், அதற்கு வேண்டிய உவமையை எடுத்துரைக்கும் நுட்பமும் மிகவும் பாராட்டிற்குரியன என அடிகளார் எடுத்துரைக்கிறார்.

"இயற்றதமிழ்வல்ல நல்லிசைப் புலவராதலால் வான நூலினும் வல்லவராகக் காணப்படுகின்றார். இவர் தாம் இயற்கைப் பொருள்களை மொழிந்து சொல்லுங்கால் அதற்கு இணையாக வான்மீன் தோற்றங்களை உவமையாக எடுத்துக்காட்டுகின்றார்" உருத்திரங்கண்ணனார்.

மேலும், மழை பெய்யாமல் வரண்டு போவதற்குக் காரணம் வெள்ளி என்ற கோள் தன்னிலைத் திரிந்து தென்திசைப் பக்கமாய்ச் செல்லுதலே காரணம் என்கிறார். நட்சத்திரங்களும், கோள்களும் ஒன்றோடொன்று விரவுதலை ஒருவரோடொருவர் பிணைந்து இருக்கும் செம்படவர்க்கு உவமையாகக் காட்டுவது சிறப்பாகும்.

"அக்காலத்து வான் நூலாராய்ச்சி உண்டோவெனின் இற்றைக்கு ஆயிரத்து நானூறு ஆண்டுகட்கு முன்னிருந்த ஆரியபட்டாராற் செய்யப்பட்ட வான் நூலிற் பிற்றைஞான்றை வான் நூலாராற் சொல்லப்படுகின்ற 'இந்நில மண்டிலம் தன்னைத்தானே சுற்றுதலும், ஞாயிற்றின் மேலும், திங்களின் மேலும் படும் நிழல்கள் நிலமண்டிலத்தின் சாய்லாதலும்' முதலான அரிய பெரிய உண்மைகள் இனிது விளக்கப்பட்டிருத்தலானும், அவரை அடுத்துத் தோன்றிய வராக மிகரரால் மேற்கோளாகக் கொள்ளப்பட்ட சூரியசித்தாந்தம் என்னும்

வான்நூல் மிகப்பழைய தொன்றாதல் அறிவுடையரால் நன்கு துணியப்படுதலானும்''

1400 ஆண்டுகளுக்கு முன்பே வான் நூலாராய்ச்சி எல்லாம் இருந்தது எனவும் அதற்குச் சான்றாக ஆரியப்பட்டரால் செய்யப்பட்ட வான் நூலிலும், பின்னைய நாளில் கூறப்பட்ட வான்நூலிலும் இந்த பூமியானது தன்னைத்தானே சுற்றுதலும், சூரியன் மீதும், நிலவு மீதும் படும் நிழல்கள் பூமியின் சாயலாதலால் நடைபெறுகின்றது என்ற அரிய பெரிய உண்மைகள் இனிமையாக விளக்கப்பட்டிருக்கின்றது. அவரை அடுத்துத் தோன்றிய 'வராக மிகரரால்' மேற்கோளாகக் காட்டப்பட்ட 'சூரிய சித்தாந்தம்' என்ற வான்நூல் மிகப்பழைய நூல். இந்நூல் நன்கு அறிவுடையவரால் ஆராயப்பட்டு பண்டைய நாளில் வான்நூலாராய்ச்சி இருந்தது என உறுதியாக கூறப்பட்டிருக்கின்றது.

இலக்கிய ஆராய்ச்சி (முல்லைப் பாட்டு)

''இவ்வகப் பொருள் முல்லையொழுக்கத்தினை இவ்வாறு நடத்திக் கொண்டு சென்று, 88ஆவது வரியில் 'இன்பல் இமிழிசை ஓர்ப்பனார் கிடந்தோள்'' என்பதுடன் முடிக்குமிடத்தும் வினைவயிற்பிரிந்த தலைமகன் மீண்டு வந்தமை சொல்லவேண்டுதலின், அங்ஙனஞ் சொல்லப்படும் பொருளையுங் கற்போர் உற்றுநோக்கும் பொருட்டு இவ்வாறு கிடந்தோளுடைய அழகிய செவி நிறைய ஆரவாரித்தன' என்று மேல் ஒட்டப்படுஞ் சொற்றொடரின் பயனிலையான 'ஆரவாரித்தன' என்பதை, முடிக்கப்படும் அகப்பொருளின் இறுதி மொழியான 'கிடந்தோள்' என்பதுடன் சேர்த்தி, அதன் எழுவாயான 'விளைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே' என்பதைக் கடையிலே நிறுத்தி, அவ்விரண்டிற்கும் இடையில் அவன் மீண்டு வந்தமை விளங்கக் கூறி அமைத்தார்.''

'கிடந்தோள் செவி நிறைய ஆலின'

தலைமகன் வரவை எண்ணி, இனிய இசையைப் போன்று பேசக்கூடிய அழகான பல்லையுடைய தலைமகள் காத்திருந்தாள். அப்போது வினைவயிற் பிரிந்த தலைவன் வந்த செய்தியைத் தலைவியின் செவிநிறைய ஆராவாரித்தன என்ற நயச் செய்தியைக் குறிக்கும் சொற்றொடரானது எழுவாய், பயனிலையைக் கொண்டு முடியாமல் பயனிலை, எழுவாயாக முடிக்கப்பட்டுள்ளது. ஏன் என்பதற்கு மறைமலையடிகளார் தரும் விளக்கம் அவரது 'கிடந்தோர் செவி நிறைய ஆலின என்று எவை ஆலின்? என்னும் ஆராய்ச்சி தோன்றி மேல்வரும்

பொருள் படிப்போருக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பயனிலையை முன்னும் எழுவாயைப் பின்னுமாக வைத்துப் பிறழக் கூறினார். இதற்குக் காரணம் படிப்போருக்கு மேலும், மேலும் இன்பம் பயப்பதற்காகவே கூறியிருக்கிறார். இவ்வாராய்ச்சியில் இருந்து அடிகளாரின் ஆழ்ந்த புலமை வெளிப்படுகின்றது.

"உலக இயற்கையிற் கண் முதலான புலன்களுக்கு விளங்கித் தோன்றும் அழகை யெல்லாந் தன்னகத்தே நெருங்கப் பொதிந்து வைத்துப் பின் அவற்றை நம் அறிவினிடத்தே புலப்படுவண்ணந் தோற்றுவித்துப் பொருள் நிகழ்ச்சியோடு மாறுபடுதல் இல்லா இனிய ஓசையுடன் இசைந்து நடைபெறும் இயல்பினை உடையது தான் பாட்டென்று அறிதல் வேண்டும்"

கண்ணெதிரே தோன்றக் கூடிய உலக அழகையும், இயற்கை அழகையும், கண்களால் பார்த்து புலன்களுக்குள் பதிய வைத்து, பின்பு அவற்றை நம் அறிவினிடத்தில் புகுத்தி, பொருள் நிகழ்ச்சியோடு எவ்வித மாறுபாடும் இல்லாமல் இனிய ஓசையுடன் இசைந்த இயல்புதான் பாட்டென்று அறிதல் வேண்டும் என்று, பாட்டின் இயல்பு பற்றி அழகாக வர்ணித்துக் கூறியுள்ள செய்தியைத் தன் இலக்கிய ஆராய்ச்சிதிறன் மூலமாக அடிகளார் தெளிவாகச் சுட்டிகாட்டியுள்ளார்.

வரலாற்றுக் குறிப்புகள்

பட்டினப்பாலை

"அக்காலைக் காவிரிப் பூம்பட்டினத்தில் வாணிகம் பெருகுங் கடைத்தெருவுகள் பலவிருந்தன. அவற்றில் அரிசிப் புரைகள், சரக்கு அறைகள், பாக்கு வெற்றிலைக் கடைகள், மெழுகுப் பொதிந்த பேழைகள், கள்ளுக்கடைகள், மலைநாட்டு மிளகு பொதிகள், மேரு, இமயம் முதலான வடமலைகளினின்றுங் கொணர்ந்த மணிகள், பொறகட்டிகள் விற்குங் கடைகள், குடகு மலையிலிருந்து வந்த சந்தனக் கட்டை, அகிற்கட்டை குவித்த மளிகைக் கடைகள், இலங்கைக் கடல் முத்து, வங்காளக் கடற் பவளம், கங்கையாற்றுப் பொருள்கள், கடார தேயத்து உணாப்பொருள்கள், சீனத்துப்பட்டுகள் என இவையெல்லாம் நிறைந்த பெருங்கடைகள் ஆகிய பலவும் நிரம்பி நெருங்கி இருந்தன"

அன்றையக் காலகட்டத்திலேயே காவிரிப்பூம்பட்டினத்தில் வாணிபம் நடைபெறும் போது கடைவீதிகளில் என்னென்ன பொருள்கள் வியாபாரம் செய்யப்படுகின்றன என்பதோடு மட்டுமல்லாமல் பர்மாவில்

இருந்து குதிரைகள் வாங்கப்பட்டு அதனையும் கூட விற்பனை செய்திருக்கின்றார்கள் என்பது பற்றிய வரலாற்றுச் செய்திகளை ஆசிரியர் பதிவு செய்துள்ளார் எனலாம்.

மேலும், அந்த நகரத்தில் பல நூல்கள் இருந்தன என்றும், அதனைக் கற்பதற்கும், விவாதம் செய்வதற்கும் ஏற்ப ஆசிரியர்களே ஒன்று சேர்ந்து பல்கலைக்கழகம் அமைத்தனர் எனவும், இந்நூலின் வரலாற்றுக் குறிப்பாக ஆசிரியர் கூறியதை அடிகளார் எடுத்துக்காட்டுகிறார்.

''முன்னாளில் கடவுளைத் தொழுதல் வேண்டிச் சமைக்கப்பட்ட கோயில்கள் 'அம்பலங்கள்' என்னும் பெயருடையவாயிருந்தன. அவற்றின்கட் கடவுளை வழிபடுவதற்குத் தொழுகுறியாக நிறுத்தப்பட்டதை 'உருகந்து' எனப் பெயர் பெற்றது. அவ்வுருவினையே இக்காலத்திற் 'சிவலிங்கம்' என வழங்கி வருகின்றனர்''

முன்னைய நாளில் கடவுளை வழிபடும் இடத்திற்கு 'அம்பலங்கள்' என்ற பெயர் தான் வழக்கில் இருந்தன. பிறகு தான் 'கோயில்கள்' போல கடவுளைக் 'கந்து' என்ற பெயரால் வழங்கி வந்தார்கள் பின்னைய நாளில் அதனையே 'சிவலிங்கம்' என்ற பெயரால் வழங்கத் தொடங்கினர்.

இன்றைய காலகட்டத்தில் இருக்கின்ற மக்களைப் போன்று திருவுருவங்கள் அக்காலத்தில் பெரும்பாலும் கிடையாது. சிவலிங்கம் என்ற கந்து உருவையே வழிபட்டு வந்தனர். இந்தச் சிவலிங்க உருவம் மட்டுமே எல்லா சாதியராலும், எல்லா நாட்டு மக்களாலும் வழிபாடு செய்யப்பட்டு வந்தது என வரலாற்று நூலாராய்ச்சியாளர்கள் உறுதியாகக் கூறியிருக்கின்றனர். இந்தக் காரணத்தினால் தான் சிவபெருமான் கோவில்களில் முதன்மையாகக் கருவறையில் மட்டும் சிவலிங்கமும் முதன்மை இல்லாத பிற இடங்களில் ஏனைய உருவங்களும் அமைக்கபட்டிருக்கின்றன.

முல்லைப்பாட்டு

''பண்டைக் காலத்தே ஆசியாக் கண்டத்தின் வடதிசைப் பக்கங்களில் இருந்த ஆரியர், குளிர் மிகுந்த அவ்விடங்களை விட்டு, இந்திய நாட்டிற் குடிபுகுதற்கு முன், இவ்விந்திய நாடு முழுவதும் பரவியிருந்த மக்கள் தமிழரேயாவர்'' எனவே, தமிழர்கள் தான் இந்திய நாடு முழுவதும் வாழ்ந்து வந்தார்கள் என்றும், ஆரியர்கள் நம் பாரத நாட்டிற்கு வந்தேறியவர்கள் என்ற வரலாற்றுச் செய்தியை அடிகளார் தம் உரையில் பதிவு செய்துள்ளார்.

தமிழர்களின் பண்டைய கால வாழ்வியல் முறையைப் பற்றி ஆசிரியர் கூறிய வரலாற்றுச் செய்தியை அடிகளார் தெளிவாக விளக்கி காட்டியுள்ளார்.

முடிவுரை

மறைமலையடிகளின் முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை ஆராய்ச்சி உரைகளின் மூலம் மூல நூலின் தன்மைகளையும், இலக்கிய நயங்களையும் அக்கால மக்களின் வாழ்வியல் முறைகளையும் தொகுத்துச் சொல்லியிருப்பதைக் கண்டுணரலாம். மேலும், அவற்றை நாம் அறிந்துக் கொள்வதின் வாயிலாக, மறைமலையடிகளின் ஆராய்ச்சியுரையின் சிறப்பியல்புகளை அறிந்து கொள்ளமுடிகிறது.

வாசகர் வாசகம் (1)

அன்பார்ந்த செந்தமிழ் ஆசிரியர் பெருந்தகையீர்,

வணக்கம். ஆக. 15 சுதந்திர தின விழா நல் வாழ்த்துக்கள்.

செந்தமிழ் சூலை இதழ் 27ல் வந்தது. செந்தமிழ்க் கல்லூரி, பண்பாட்டின் படி நிலையாக, முதலாண்டு மாணவர்களுக்கு வரவேற்பு விழா செய்திப்படம் கண்டு மகிழ்ச்சி. ஆண்டுதோறும் இவ்விழா தொடர வேண்டும்.

கவிதைப் பிரியர்களையும் மறவாமல் தொகுப்புரை தந்து, இதழ்மணம் கமழச் செய்துள்ளார் முனைவர் திரு. க. சின்னப்பா அவர்கள். ஆறு படைப்புகளில் சரிபாதி மகளிர்க்கு என, ஒதுக்கீடு உச்சத்தைத் தொட்டுள்ளது !

கலித்தொகை - கட்டுரையில், 29 குறுந் தலைப்புகளில் வாழ்வியல் சித்திரிக்கப்பட்ட உத்தி, நூலைப் புரட்டிப் பார்ப்பவர் எவரும் படிக்கத் தூண்டும். ஒப்பிலக்கிய... கட்டுரையில் மேற்குவான (மாலைநேர) எ-டு. சுவையானது. பெண்ணியம்... கட்டுரையில், பெண்கல்வி நாட்டையே உயர்த்தும் எனும் கருத்து, போற்றத்தக்கது. செய்தி... தொடர்க.

எளியேனின் சூழல்... கட்டுரையும், வாசகமும் வெளியிட்டமைக்கு நன்றி.

செந்தமிழ் தொண்டு சிறப்புடன் தொடர்க !

அன்பு ஏற்றுக்கொள்ளுங்கள்.

இப்படிக்கு

புலவர் சி. பாண்டுரங்கன் ஆம்பூர்

சிலம்பில் ஒலிக்கும் பெண்ணியப் பரல்கள்

இரா. மோகன்குமார்
சேலம்

தொன்மங்கள், இலக்கியங்கள், அரசியல் வரலாறு எனப் பதியப்படும் அனைத்து வகையினவும் பொது நோக்கு கொண்டவை. எதிர்காலத்தோர் அறிந்து கொள்வதின் மூலம் தம் வாழ்வில், தான் சார் சமுதாயத்தில் அல்லவை நீக்கி, நல்லவை சூழ்ந்து வாழ்க்கை சுவைபட அமைய வேண்டுமென்பதின்றி வேறொன்றிருக்க வாய்ப்பில்லை.

ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக்கு வாயுறை, சிறைச் சோறு, ஐயம், தின்பண்ட நல்கல், அறவைச் சோறு, மகப்பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வளர்த்தல், அறவைப் பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்க்கு மருந்து, ஆசிரியர், வண்ணார், நாவிதர், கூலி வழங்கல், கண்ணாடி, காதோலை, கண் மருந்து, தலைக்கெண்ணெய், பெண் போகம், பிறர்துயர் களைதல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறு விடுத்தல், விலை கொடுத்துயிர் காத்தல், கன்னிகாதானம் என முப்பத்திரண்டு அற வகைகளை இம்மண்ணின் முன்னோர் வாழ்வின் உயிர்நாடியாகக் கொண்டு வாழ்ந்துள்ளார்கள்.

தொல்காப்பியர் வகுத்த வழி வாழ்ந்து காட்டியதாலேயே இம்மண், தமிழ் மண், தன்னெழில் குழையாப் பண்பினைக் கொண்டு பாரோர் பாராட்டும் வண்ணம் வாழ்ந்து வருகிறது.

ஐம்பெருங்காப்பியங்களிலும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலும் பதிந்து உள்ளவைகள் இக்கால, எதிர்காலத் தலைமுறையினருக்குத் தந்துள்ள வாழ்வியல் வழிகாட்டிகள்.

தமிழ் மண்ணின் பெண்கள் பெற்றிருந்த பண்பு நலன்கள், பெண்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சிறப்பு, பெண்ணுக்குப் பெண் செய்து கொண்ட உதவி ஆகியவைகளை இன்றைய பெண்ணியச் சிந்தனைக்கும், பெண்ணியச் சிந்தனையாளர்கட்கும் கற்பிக்கும்

வழிகாட்டி நூலாக அமைந்துள்ளது சிலப்பதிகாரம். பெண்ணினத்திற்கு பெருமை தரும் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். அதன் மங்கல வாழ்த்துப் பாடலிலேயே பெண்ணாகிய 'திங்களைப் போற்றிப்' பாடப்பட்டுள்ளது முதற் சான்று.

சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கதை மாதரும், தம் மனம், மொழி, காயத்தால் தம் இனத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் வாழ்ந்துள்ளார்கள்.

கண்ணகி

கதைத் தலைவி கண்ணகியை – இறையருள் மேவிய சாலினி

'கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
ஒரு மாமணியாய் உலகில் தோன்றிய
திரு மாமணி''

என்று பாடி பெண்ணின் சிறப்பைப் பேச மற்றொரு பெண் தயங்கக் கூடாது என்பதற்கு முதல் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறாள்.

'இறைவனை அல்லாது அழிந்து மடியும் எதனையும் ஒலிக்காது என் நா' என்ற உறுதியுடன் வாழ்ந்த கவுந்தியடிகள் கூட கண்ணகியெனும் பெண்ணிடம் சிறப்பு கண்டவிடத்து

'கற்புக் கடம் பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்'

என்று பாடி தன் மெய்யன்பை வெளிப்படுத்துகிறார்.

திருமண வாழ்த்துப் பாடிய மகளிரும் கண்ணகியை 'அங்கன் உலகின் அருந்ததி அன்னாளை' எனப் புகழ்ந்து பாடி தம் கலப்பில்லா பெண் மனதை வெளிக் காட்டியுள்ளார்.

குன்ற குரவையில் கண்ணகியைக் கண்ணுற்ற குறவர்கள்

'சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
தெய்வம் கொள்ளுமின் சிறுகுடி யீரே'

எனப் போற்றுவதன் மூலம் பெண்ணைப் போற்றுவதில் தயக்கம் காட்டாத மக்களாக வாழ்ந்துள்ளார்கள் என்பதை உணர முடிகிறது. மானுடப் பிறப்பாயினும் கண்ணகியின் தோற்றம் அவர்கள் மனதில் தெய்வமாக கருதும் எண்ணத்தை உருவாக்கிய சிறப்பு பெண்ணினத்திற்குப் பெருமை தருவதாகும்.

வில்லவன் கோதையும்,

"இமய மால்வரைக்கு எங்கோன் செல்வது
கடவுள் எழுதவோர் கற்கே யாதலின்"

என்று கண்ணகியை கடவுள் நிலையிலேயே காண்கின்றான்.

பாண்டியன் பட்டத்தரசி, சேரன்மாதேவி தாம் நாட்டின் அரசியாயினும், சாதாரண குடிமகளை உயர்த்தி உரைப்பதில்,

"பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" - தயக்கம் காட்டாது மொழிந்து பெண்ணினத்தின் பரந்துபட்ட பண்பாட்டை நிலை நாட்டுகிறாள்.

இல்லறம் புகுந்த பெண்டிர், தன் தவறாலோ, விதிவசத்தாலோ பொருளை இழந்து நிற்கும் நிலையுறும் போது உதாசீனப்படுத்தாமல் 'விடியும் நாள் விடியலைத் தரும்' என்று நல்மொழி கூறி தன் அணிகளை அளித்து ஊக்கமளிக்க வேண்டுமென்பதை, கோவலன் கைப்பொருள் இழந்தவனாய் மாதவியிடமிருந்து பிரிந்து வந்த நிலையில் வையாது, ஏசாது, கடுத்த முகம் காட்டாது,

"நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிச்
சிலம்புள கொண்மெனச் சேயிழை கேள்இச்"

எனக் கூறி காற்சிலம்பினைத் தந்து கைத்தளம் பற்றியவனுக்குத் தன் கடமையைக் கனிவுடன் செய்தாள்.

மாதவி

ஆடலுக்கு ஆண்டவனாய் சிவபெருமான் கருதப்படினும் கலை நயம் கொண்டோர் கன்னியரே எனக் கொண்டு ஆடல் கலையைப் பெண்களுக்கு அளித்துள்ளனர். ஆணுக்குப் போட்டியெனக் கொள்ளாமல்

பெண்ணால் கலைக்குப் பெருமை சேரும் என மகிழ்ந்தே பெண்ணுக்குப் பங்களித்தனர். அவ்வாய்ப்பினைப் பெறுகின்ற பேறு பெற்றவளாக மாதவி அமைந்துள்ளாள். ஆடல், பாடல், அழகு என மூன்று பரிமாணங்களிலும் முகிழ்ந்தவளாய் மாதவி முதிர்ச்சி பெற்று விளங்கினாள்.

திருமாலை வாழ்த்தும் தேவபாணி, பூதர் நால்வரைப் பாடும் தேவபாணி, திங்களைப் பாடும் தேவபாணி ஆகிய பாடல்களில் வல்லவளாகவும், ஆடல் கலைகளில், கொடுக்காட்டி, பண்டரங்கக் கூத்து, அல்லியந்தொகுதி, மல்லாடல் கூத்து, துடிகொட்டி, குடைக் கூத்து, குடக் கூத்து, பேதக் கூத்து, மரக்கால் கூத்து, பாவைக் கூத்து, கடையக் கூத்தென பல்வகையிலும் சிறந்து, காண்போரைக் கவரும் கட்டுக் குலையாத மெய்யழகும் கொண்டவளாய் படைக்கப்பட்டிருக்கிறாள்.

கணிகையர் குலத்தில் பிறந்த பெண்ணுக்கும் நிலையான, உறுதியான இல்லறம் அமைக்கப்பட வேண்டும். தகுதி வாய்ந்த கணவனைத் தேடி மணமுடித்துக் கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தை மாதவியின்,

''நூறுபத் தடுக்கி எட்டுக்கடை நிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை
மாலை வாங்குநர் சாறுநங் கொடிக்கென
மானமர் நோக்கியோர் கூனிகை கொடுத்து''

பொருளாதாரத் தகுதியை முன்னிலைப்படுத்தி துணையைத் தேடினாள். கலை கலைக்காகவேயெனினும் காசில்லா நிலையில் கலை மேன்மையுறாது. இன்று பெரும்பாலான கலைசார் குடும்பங்கள் பொருளாதார நலிவின் காரணமாக தம்முள் பிரிவினையைத் தேடுவதைக் காண முடிகிறது. தன்னிலை தாளாமல் தனக்கு விலை வைத்து ஆணை வயப்படுத்திய மனத் துணிவு பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்கக் கூடியது.

கோவலன், கண்ணகியின் முடிவைக் கேள்விப்பட்ட அவர்களது பெற்றோர்களில் இருவரது தந்தையரும் துறவறம் பூண, தாயார் இருவரும் உயிரையே மாய்த்துக் கொண்டு, இரக்க குணத்தில் பெண்ணை விஞ்ச ஆணால் முடியாது என்பதை நிலை நிறுத்தியுள்ளனர்.

சோழ மன்னனின் செங்கோலை மறுப்பதற்கு அஞ்சி கூற்றம் கூற தன்னை அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய பெண்மைப் பண்புகளைக் கொண்டு,

"நானுடைக் கோலத்து நகைமுகம் கோட்டிப்
பண்மொழி நரம்பின் திவவியாழ் மிழற்றி
பெண்மையில் திரியும் பெற்றியும் உண்டென"

புகார் நகரில் திரிந்து பெருமை தேடிக் கொண்டது.

வசந்த மாலை

சேடிகள் அமைவதும், தோழிகள் அமைவதும் தம் உளப்பாங்கே. கணிகையர் குல தோன்றலாயினும் கற்பு நிறை மாதவியின் பால் மட்டில்லா பற்றினைக் கொண்ட தோழி வசந்த மாலையின் உள்ளப் பாங்கு தன்னிலை மருகி, மாதவி அளித்த முடங்காலை ஏற்க மறுத்த கோவலன் செயலைக் கண்டவள்,

"அணித்தோட்டுத் திருமுகத்து ஆயிழை எழுதிய
மணித்தோட்டுத் திருமுகம் மறுத்தற் கிரங்கி
வாடிய உள்ளத்து வசந்த மாலை"

என மாதவிக்கு நேர்ந்த பிரிவுத் துயர் தனக்கு உற்ற துயர் எனக் கலங்கினாள். இப்பண்பு தாங்கிய படைப்பு மாதர் இனத்தின் பெருமைக்கு மேலும் ஒரு சான்று.

மாலதி

விதியின் செயலால் வீண் பழி வந்துறும் வேளையில் வனிதையர் கொள்ளும் மனத் துயரத்திற்கும் அக்குறை தீர அல்லலுறும் போக்கிற்கும் மாலதி ஓர் எடுத்துக்காட்டு.

"மாலதி மாற்றாள் மகவுக்குப் பாலளிக்க
பால்விக்கி பாலகன் சோர மாலதியும்
பார்ப்பா னொருமனையாள் மன்மேல் படாதனவிட்டு
ஏற்பன கூறாரென் றேங்கி மகக் கொண்டு"

என்று வீண்பழி தீர, கையில் குழந்தையுடன் கற்பகம் நிற்கும் கோயில், ஐராவதம் நிற்கும் கோயில், பலதேவர் கோயில், சூரியன்

கோயில், ஊர்காவல் தெய்வக் கோயில், முருகன் கோயில், வச்சிரப் படை நிற்கும் கோயில், மாசாத்தான் கோயில் எனப் பல கோயில்களுக்குச் சென்று முறையிட்டு, கத்தி, கதறி குரலிட்டு பாசண்டச் சாத்தன் மூலம் இறந்த குழந்தையை மீட்டு தாய்மைப் பண்பை உலகறியச் செய்தாள்.

தேவந்தி

மாலதிக்கு மகவை மீட்டுத் தந்த பாசாண்டச் சாத்தன் என்னும் தெய்வம், மணந்த தேவந்தியை பிரிந்து தெய்வக் கோலம் பூண்டான். தன் துயர் பொறுத்து தேவந்தி பாசாண்டச் சாத்தன் கோயிலுக்குச் சென்று வழிபட்டு மனம் மகிழ்ந்தாள். அந்நிலையிலும்

"கண்ணகி நல்லாளுக் குற்ற குறையுண்டென்று
எண்ணில் நெஞ்சத் தினையளாய் நண்ணி
அறுகு சிறுபூளை நெல்லொடு தூஉய்ச் சென்று
பெறுக கணவனோடு என்றாள் பெறுகேன்
கடுக்குமென் நெஞ்சம் கனவினால் என்கை"

தன் தோழியாகிய கண்ணகியின் துயர் தீர கோவலனுடன் சேர்ந்து வாழ வேண்டுமென்று தன் தலைத் தெய்வம் பாசாண்ட சாத்தனிடம் முறையிட்டு வேண்டிய பண்பு இக்காலத்தும் பெண்களின் தொடர் சொத்தாய் பேணிக் காக்கப்படுகிறது.

கவுந்தியடிகள்

'மறஉரை நீத்த மாசறு கேள்வியர்
அறவுரை கேட்டாங் கறிவனை ஏத்தத்
தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்கு
ஒன்றிய உள்ளம் உடையே ஆகலின்
போதுவல் யானும் போதுமின் என்ற
காவுந்தி".......

முற்றாத மழலை முகங்கொண்ட கண்ணகியின் துயரத்தில் தோய்ந்த கோவலனின் நிலை கண்டு தான் ஈன்ற நன் மக்காள் என மனங்கொண்டு அவர்களுக்கு வழிகாட்டியாக உடன் துணையாக மதுரைக்குப் புறப்பட்ட அடிகளின் அன்பு, துறவறம் பூண்டோர் உலகறம்

பேணி, பிறர் துயர் நீக்கத் தாம் துயர் மேற்கொள்வதே என துறவிகளுக்கு இலக்கணம் வகுத்த பெருந்தகை.

மாதரி

தாயினும் சாலப் பரிந்து நல் வெண் பாலை சுரந்து தரும் பசுவின் பாலை யாவர்க்கும் நல்கும் ஆயர் குலத் திலகம் மாதுரி. தான் ஈன்ற கன்றுக்கு மட்டுமல்லாது, வையத்து மக்களுக்கும் பால் தந்து உயிர் காக்கும் பசுவைப் போல,

''புறஞ்சிறை மூதூர் பூங்கண் இயக்கிக்கு
மால்மடை கொடுத்துப் பண்பின் பெயர்வோள்
ஆயர் முதுமகள் மாதரி என்போள்''

கவுந்தியடிகளின் மொழி கேட்டவுடன், தானே தாயாகி தன் மகள் ஐயைக்கு நங்கையாக்கி, தோழியாய், செவிலியாய், காக்கும் நல் தலைவியாய், கண்ணகிக்கு அடைக்கம் தந்ததோடு காத்துப் பணி செய்த மாதரி அவள் பிறந்த குலத்திற்கு மட்டுமல்லாமல் பெண் குலத்திற்கே பெருமை சேர்த்தவள்.

சாயலன் மனைவி

வீட்டிற்குள் புகுந்த குரங்கினை, உணவருந்த வந்த மாமுனிவன், 'நின் மக்களாய் கொள்' என்று கூறியதை உள்ளத்தால் பற்றி அக்குரங்கு இருந்த காலம் மட்டுமன்றி இறந்த பின்னும் அதன் நினைவாய் தானம் செய்து வந்தாள்.

''ஊர்சிறு குரங்கொன்று ஒதுங்கியுள் புக்கு
..
...நயந்து நின்
மக்களின் ஓம்பு மனைக் கிழத் தீயென
மிக்கோன் கூறிய மெய்ம் மொழி ஓம்பிக்
காதல் குரங்கு கடை நாள் எய்தவும்
தானஞ் செய்வுழி அதற்கொரு கூறு''

தாய்மையின் பண்பு உயிர் பொருள் நேசம். விலங்கினங்களின் மீதும் பாசம் காட்டுதல் வேண்டும் மென்பதை உணர்த்திய சாயலன்

மனைவி இயற்கையின் படைப்புக்களிடத்தில் அன்பு பாராட்ட வேண்டுமென்ற படிப்பினைப் புகட்டும் படைப்பு.

பாண்டியன் நெடுஞ்செழியன்

"தேராமன்னா செப்புவது உடையேன்
கொலைக் களப்பட்ட கோவலனின் மனைவி"

பெண்ணொருத்திக் கூறிய வழக்கென்று இகழ்ந்து வாயில் புறத்தே வழியனுப்பி வைக்காமல் பொன்செய் கொல்லன் தன் சொல் கேட்டு செங்கோல் தளர, கொன்று கொணர்க

என ஆணையிட்டு கொலைப் பழி கொண்டேன் எனப் பற்றி மணிமுடி வீழ, தன் பின்னோர் குடி சிறக்க 'கெடுக என் ஆயுள், கெடுக என் ஆயுள்' என்றபடி மயங்கி வீழ்ந்து மடிந்து போனாலும், விண்ணுலகில் இன்றும் நீதியின் விளை நிலமாய் ஒளிர்கிறான்.

பெண்ணினத்திற்குத் தீங்கு விளைவிப்பது பெருங் குற்றம். கொற்றவனே யாயினும் தலை வணங்கிட வேண்டுமென கற்பிக்க இவன் சான்று.

கணவனை இழந்தபின் மண்ணுலகில் பெண்ணொருத்தி வாழ்தல் தருமோ எனக் கூறாமல் தன் உயிர் தன் கணவனுடன் பயணிக்க உயிர் துறந்த பாண்டியன் தேவி பத்தினிப் பெண்களின் பாங்கிற்கும் பாடம் சொன்னவள். பாண்டியன் தேவியின் செயலில் புதுமை ஏதுமில்லை. ஏனெனில் தமிழக மகளிர் கற்பினைத் தம் உயிராய் கருதுபவர்கள்.

தன் கற்பின் திறத்தால் வன்னி மரத்தையும், மடைப் பள்ளியையும் தனக்குச் சான்று கூறும் பொருட்களாகக் கொணர்ந்து நிறுத்திய பெண்,

மணற்பாவையைத் தன் கணவனெனத் தன் தோழியர் கூறியதை மனங்கொண்டு, அப்பாவையை அழியாதவாறு காத்த பெண்,

காதல் கணவன் ஆட்டனத்தியைக் கடல் கொள்ள காவிரிக் கரை நடந்து கடல் அரசனிடமிருந்து மீட்டு வந்த ஆதிமந்தி.

பொருளீட்டச் சென்ற கணவன் வரும் வரை கல்லுருவாய் நின்று தன்னை மறைத்துக் கொண்ட பெண்.

பாலூட்டத் தந்த மாற்றாளின் குழந்தை கிணற்றில் வீழ பழிச் சொல்லுக்கஞ்சி தன் குழந்தையையும் கிணற்றில் வீசி கற்பின் திறத்தால் இரண்டு குழந்தைகளையும் மீட்டுப் பெற்ற ஒருவள்.

தன் தோற்றம் ஆடவர் மனதில் ஆசையினைத் தோற்றுவித்தல் கூடாது என கணவனை பிரித்திருந்த காலத்தில் முகத்தை கருங்குரங்கின் முகமாக்கிக் கொண்டு தலைவன் வந்தபின் தன் முகங்கொண்ட பெண்.

தாய் கொடுத்த வாக்கிற்கு தன்னினும் இளைய மகவை தன் வாழ்க்கைத் துணையாகக் கொண்ட தூயவள் என கற்பெனும் திண்மையுடன் வாழ்ந்த சீர்மிகு மண்.

தமிழ் கூறும் நம்மண் தரணியில் உள்ள வரை மங்காப் பேரும் புகழும் கொண்ட பெயர் கண்ணகி. இவள் பெயரே ஒரு காரணப் பெயரெனக் கருதிடவும் காரணமுண்டு. கண் + அகி எனும் 'அகி' என்ற சொல்லுக்குச் செங்கதிரோனின் கதிர்கள் என்ற பொருளுண்டு. கண்களில் நெருப்பின் தனலைப் பெற்றதோடு அல்லாமல் தான் பூப்பெய்தி, இல்லறம் இன்பம் துய்ப்பதற்கு முன் தன் இணையைப் பறித்த இவ்வுலகோரைத் தண்டிக்கத் துணிந்ததில் தவறில்லை. ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவானது புணர்ந்து இன்புறுதல். இல்லறத்தின் கடமை தன் குல உருவாக்கல். அதுவும் பறிக்கப் பட்ட நிலையில் கனன்றெழுவது இயல்பே. அவ்வின்பம் பிற இன்பங்களை, மகிழ்ச்சியை இழப்பதினும் கொடிது. ஏனெனில், மற்றொன்றைப் பெற்று மனதைத் தேற்றிக் கொள்ளக் கூடியது அல்ல காமமும், புணர்ச்சியும். அத்தகையச் சூழலில் பெண்களின் மனதில் தோன்றும் ஆத்திரம், ஆவேசம், வன்மம் வார்த்தையால் வடிக்கக் கூடியது அல்லது. அந்நிலையை அடைந்ததாலேயே தன் கையாலேயே இடது மார்பின் முன்முகப்பைக் கிள்ளியெறிய முடிந்தது.

தனக்கு ஈடு செய்ய இயலா இழப்பை ஏற்படுத்திய மண்ணைத் தண்டிக்க முற்பட்ட போதும், கோபக்கனலாய் கொதித்தெழுந்த நிலையிலும், நிதானத்தை இழக்காமல் அறவோர், அந்தணர், முதியோர், பசு, கற்புடைப் பெண்டிருக்கு தீயினின்று விலக்களித்துக் காத்தாள். பெண்மைக்குண்டான இரக்க குணத்தை இறுதியிலும் கை கொண்ட **'பூரைதீர் கற்பின் தேவி' புகழ் வாழ்க !**

திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறிமுறைகள் - தொடர்

சித்தாந்த நன்மணி
முனைவர் கா. அரங்கசாமி
கோபி

2. குறளாசான் தரும் சொற்பொருள் விளக்கம்

தொகுதி 55 பகுதி 3 இதழில் (சனவரி 011) இத்தொடரின் முதல் கட்டுரை இடம் பெற்றது. அதில் குறித்த 18 அடித்தளக் கொள்கைகளில் முதற் கொள்கை பற்றி இக்கட்டுரை பேசுகின்றது. குறளாசான் பத்துப் பத்துக் குறளாகப் பகுத்துச் சென்றது போலப் பத்து வகையாகச் சொற்பொருள் விளக்கமும் தருகிறார். அவையாவன,

1. உயிர் போன்ற சொற்களுக்குத் தரும் விளக்கம் (அல்லது) இயக்க இயங்காற்றல் மிக்க சொற்களுக்குத் தரும் விளக்கம்.
2. அதிகார அமைப்பில் தொடர்புப் பொருளால் தரும் விளக்கம்.
3. சூழ்நிலையால் தரும் பொருள் விளக்கம்.
4. அதிகாரத் தலைப்பால் நுட்பப் பொருள் உணர்த்தும் திறம்.
5. காலக் கோட்படாத நிலைத்த விளக்கம்.
6. அறம் என்பதன் அடித்தள விளக்கம்
7. பொருள் என்பதன் பொருள்தரும் விளக்கம்.
8. காமம் என்பதன் நிறைவான பொருள்.
9. யாவும் கடந்த மெய்யியல் விளக்கம்
10. முழுமையான நிறைவுப் பார்வை தரும் விளக்கம் அல்லது நோக்கு.

சிந்தனை வளம் மிக்கோர், குறளாசானின் உள்ளம் உணர்ந்தோர், இதற்கு மேலும் வழிமுறைகளைக் காணலாம். காரணம் ஆய்வுக்கு எல்லையே இல்லை.

இந்த விளக்கங்களைக் காணும் முன் சில சொற்களுக்கான உண்மைப் பொருளை அறிதல் நலம். அறிவு, மனம், விருப்பம், கடவுள், ஆன்மா, பிறவி, எண்ணம், பொருள் போன்ற பல சொற்கள் வரையறை செய்யப்பட வேண்டும். அவ்வாறு வரையறை செய்யாமல் குறளாசான் தரும் மெய்ப்பொருளை நாம் அறிதல் எளிதன்று. எனவே குறள் வழங்கும் சொற்களின் காலக் கோட்பட்ட, காலக் கோட்படாத சொற் பொருள்களையும் அறிதல் வேண்டும். அதற்குத் திருவள்ளுவர் காலச் சொற்பொருள் அகரமுதலி வேண்டும். சங்க இலக்கியப் பயிற்சியும் அடித்தளம் ஆகும். தொல்காப்பியத்தின் நிலைக்களம் காணும் திறமும் வேண்டும். புலமை உணர்வும், மெய்யறிவுத் திறமும் சொற்பொருள் காணும் வரலாற்றுப் பார்வையும் வேண்டும். இவையனைத்தும் வாய்த்து மெய்ப்பொருள் காணும் திறம் இன்றேல் பயன்படாத நிலையே நீடிக்கும். எனவே இங்கு வரும் விளக்கங்கள் யாவும் மேற்கூரிய அடித்தளத்தில் அமைந்தவை என்பதையும் அறிதல் நலம். மேலும், தரும் விளக்கங்கள் யாவும் முழுமையை நோக்கிய பயணம் என்பதையும் மனதில் இருத்தல் வேண்டும்.

1. உயிர் போன்ற சொற்களும் அவற்றின் விளக்கமும்.

தமிழ் மொழியில் எழுத்துக்களை உயிர் என்றும் மெய் என்றும் வகுத்துள்ள பாங்கு புலப்படும். உயிர் தனித்து இயங்கும் மெய் உயிரின் இயக்கம் இருப்பின் இயங்கும். அவ்வாறே சில சொற்கள் உயிராக அமைந்து இயக்க இயங்காற்றலுடன் இயங்கிடக் காணலாம். திருக்குறளில் அத்தகைய சொற்கள் பல இருப்பினும் காட்டுக்காகப் 17 குறட்பாக்களை மட்டும் இக்கட்டுரை காணும்.

1. வான்சிறப்பின் முதற்குறளில் வரும் 'அமிழ்தம்' என்ற சொல் உயிர்ச் சொல்லாகும். இத்தகைய சொற்கள் காமத்துப் பாலில் நிறைய உள்ளன. காட்டாக, 'அணங்கு' (1081) ''கூற்று' (1083) 'நோய் நோக்கு' (1091) 'பொது நோக்கு' (1099) 'தானே மருந்து' (1102) 'அமிழ்தின் இயன்றன தோள்' (1106) 'நெருஞ்சிப் பழம் (1120) 'கவ்விது காமம்' (1144) 'கால் இல் கனி' (1191) 'நீர்மை' (1272) 'மலரினும் மெல்லிது' (1289) போன்ற சொற்களைக் காட்டலாம். அவ்வாறே 'அந்தணர், அறவோர், செந்தண்மை (30) போன்ற சொற்களும், 'மாசிலன் ஆதல் அனைத்தறன் (34) என்ற தொடரும் 'தகை சான்ற சொற்காத்து' (56) என்பதன் நுட்பமும், 'அமிழ்தினும் ஆற்ற இனிதே' (64) என்பதன் தொன்மமும்; 'அன்பின் வழியது உயிர்நிலை' (80) என்னும் தொடரின் உயிர்ப்பொருளும்; 'பேராண்மை' (148) என்ற சொல்லின் நுட்பப் பொருளும்; நோற்பார் பெரியார்' (160) என்ற தொடரின் உட்பொருளும்; 'ஒத்தது அறிவான்' (214) என்பதன் உயிர் உணர்வும்; 'கேடும் உளதாகும் சாக்காடும்' (235) என்பதன் நுட்பமும் உணரின் உயிர்ப் பொருள் உணரலாம். 'தவத்திற்கு

உரு' (261) என்ற தொடரின் ஆழ்பொருளும்; 'பல்லுயிர் ஓம்புதல்' (322) என்றதன் நுண்பொருளும்; 'மெய்ப் பொருள்' என்றதன் செம்மையும் காணுதல் வேண்டும்.

'அமிழ்தம், கூற்று, அணங்கு' என்பன குறியீட்டுச் சொற்கள். அவ்வாறு தொன்மக் குறியீட்டுச் சொற்களும் குறளில் நிறையவே உள்ளன. 'தவம்' என்பதன் முழுமையான விளக்கம் குறளே தந்திடக் காண்க. புலன்களை ஆளும் ஆற்றலே 'பேராண்மை' என்பதன் உயிர்ப் பொருளும் அறிதல் வேண்டும். இவ்வாறு திருக்குறள் வழியாக உட் பொருள் காணும் திறம் பெறின் குறளின் உயிர்ப் பொருளை உணர்தல் எளிதாகும்.

2. அதிகார அமைப்பில் தொடர் பொருள் காணல்

அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்களின் ஓர்மைப் பொருளுடன் ஒத்து இயங்கும் பொதுமைப் பொருளையும் காணல் வேண்டும். பின்னர் முன்பின் உள்ள அதிகார இயைபு, குறள் இயைபு காணல் வேண்டும். காணின் குறளாசான் நெஞ்சக் குறிப்பு அறியும் வாய்ப்பு நமக்கு எளிதாகும். எந்தக் கருத்தும் உருவாக்கம் பெறத்தக்க அமைவு ஏற்படும். அந்த அந்த அமைவுக்கு ஏற்பவே அதிகாரத்துள் குறட்பாக்கள் அமையும். எனவே சிந்தனைத் தொடர்பினை அறிவிக்கும் ஆற்றல் சில தொடர்களுக்கு இருப்பதை நுண்ணிதின் உணரலாம். திட்பம் நுட்பம் சான்ற நுண்பொருள் காண வேண்டின் அதிகார இயைபும் குறட்பாக்களின் ஒத்திசைவும் அறிதல் வேண்டும். அவ்வாறு அறிவதற்குத் திருவள்ளுவரே பல்வேறு இடங்களில் நமக்குப் பாதை அமைத்து உள்ளார் என்பதையும் நாம் அறிதல் நலம். இதற்கான சான்றுகள் பல இருப்பினும் சிலவற்றையாவது நாம் காணல் நன்று.

அதிகார இயைபு, குறள் இயைபு என்னும் போது குறளின் பொருள் விளக்கம் முன்பின் உள்ள குறட்பாக்களோடு தொடர்பு பெறும். சில இடங்களில் குறளாசானே அவை மூன்று, அவை நான்கு என்று தொடர்புடன் கூறக் காண்க. சில எடுத்துக் காட்டுகளால் இதனை விளக்கலாம்.

அதிகாரம் 28 கூடா ஒழுக்கம் கூறிய பின் கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை, துறவு, மெய் உணர்தல், அவா அறுத்தல், ஊழ் என்ற அதிகார வைப்பு முறை காண்க. கூடா ஒழுக்கம் அற்றவரே கள்ளாமை மனம் பெறுவர். வாய்மையே வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை தரும். நிலையாமையே துறவு உணர்த்தும். துறவே மெய் உணர்த்தி அவா அறுக்கும். இவை யாவும் நடக்க ஊழ் (இயற்கைச்

சட்டம்) நடக்கும். (பார்க்க 'ஊழ் ஊழ் பழுத்த தீங்கனி' - சங்க இலக்கியம்) முறைப்படி முற்றிப் பழுத்துப் பயன்பல தருவதே ஊழ். அது குருட்டுத் தலைவிதியன்று.

இவ்வாறே குறட்பாக்களின் ஒத்திசைவால் பொருள் நலம் சிறக்கக் காணலாம். கள்ளாமை அதிகாரத்தில் 286வது குறளில் 'அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார்' என்று கூறியவர் 287ல் 'களவு என்னும் காரறிவாண்மை (இன்று திருட்டில் ஆண்மை பாராட்டும் திரைப்பட அரசியல் சாய்க்கடைகளைக் காண்க) அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கள் இல்' என்றும்; 288ல் 'அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம் போல' என்றும், 289ல் 'அளவு அல்ல செய்தாங்கே வீவர்' என்றும் பொருள் இயைய ஒத்திசைவுடன் கூறக் காண்க. 'அளவு' என்ற சொல் 'அளவை', அளவையியல்' போல ஆழ்ந்த உட் பொருள் கொண்டு இலங்கக் காண்க. அதனை மெய்பிக்க, 'அளவு என்னும் ஆற்றல்' (287) 'அளவின்கண் நின்று ஒழுகல்' (286) என்பதால் அளவு என்பது வெற்று அளவறிதல் மட்டும் அன்று; அதன் உள்பொருள் அளவறிதல் 'ஓர் ஒப்பற்ற ஆற்றல்,; 'ஒழுக்கம், அறிவாற்றல், அளவறியாமை அழிவு' என்று பொருள் இயைந்து விரியக் காண்க. 'அளவு' என்ற சொல்லின் பொருளைத் திருவள்ளுவரே இவ்வாறு வகை தொகை செய்தும் உட்பொருள் உணர்த்தியும் செல்லக்கண்டும்; அதன் நுட்பமும், ஆழமும் காணாது அறிஞர் என்போர் பலர் திகைத்து நிற்கக் காண்க. மெய்யியலுக்கு அளவை இயலே அடித்தளம். அவ்வாறே அளவு, அளவை என்ற கலைச் சொல்லின் அகப்பொருள், புறப்பொருள், நுட்பப் பொருள், விரிபொருள் யாவும் விளங்க வேண்டின் மேற்காட்டிய நான்கு குறட்பாவின் பொருள் இயைபு காணுதல் வேண்டும்.

அவ்வாறே 'வாய்மை' எனப்படுவது யாது எனின் என்ற வினாவினைக் கேட்டு விடையாக அவரே 'யாது ஒன்றும் தீமை இலாத சொலல்' (291) என்று கூறிடக் காண்க. தீமை என்பதன் நுட்பம் காணின் வாய்மையின் செம்மை புலப்படும். தனக்கு வரும் தீமையா? பிறர்க்கு வரும் தீமையா? மன்பதைத் தீமையா? என வினா விரியக் காண்க. இங்கும் தொடர் பொருள் வரக் காண்க. 'புரை தீர்ந்த நன்மை' (292) 'தன்னைச் சுடும்' (293) 'உலகத்தார் உள்ளத்துள் உளன்' (294) தவத்துடன் தானம் செய்தல்' (295) 'அறமும் தரும்' (296) அறம்பிற செய்யாமை நன்று' (297) 'அகந்தூய்மை காட்டுவது' (298) 'பொய்யா விளக்கே விளக்கு' (299) 'வாய்மையின் நல்லபிற இல்லை' (300) என அதிகாரம் முழுதும் பொருள் இயையக் காண்க. 'வாய்மை' என்பதன் பண்புகளாக, ஆற்றலாகப், பயனாகப் பத்துக் குறட்பாக்களில் பொருள் நுட்பம் திட்பமாக அமைந்து இயைந்து செல்லக் கூறியதன் உள்பொருள் அறிந்தால் மட்டுமே வாய்மையை அறிய முடியும்.

அவ்வண்ணமே, இன்னா செய்யாமை அதிகாரத்துள் வரும் பத்துப் பாக்களும் இயைந்து செல்லக் காண்க. முழுமைப் பார்வை அற்றோர் நுண்பொருள் காணார் என்பதையும் அறிக.

அவ்வாறே, கேள்வி (42) அதிகாரத்தும் பத்துக் குறட்பாக்களும் ஒத்திசைந்து நடந்திடக் காணலாம். 'அறிவுடைமை (43) அதிகாரத்தும் 'அறிவு' என்பதன் பரந்துபட்ட பொருள் நுட்பம் விரியக் காணலாம்.

ஒப்புரவு அதிகாரம் படைத்தவர் பொருட்பாலில் வலியறிதல் (48) என்னும் அதிகாரத்துள் 480வது குறளில் அதற்கு மேலும் ஓர் உயர்ந்த பண்பட்ட விரிவுரை தரக் காண்க.

'உளவுரைத் தூக்காத ஒப்புரவு ஆண்மை

வளவரை வல்லைக் கெடும்'' (480)

என்னும் குறட்பாவின் அதி நுட்பம் காண்க.

'ஒப்புரவினால் வரும் கேடு எனின், அஃது ஒருவன்

விற்றுக் கோள் தக்கது உடைத்து'' (220) என்றவர்

பொருட்பாலில் அதற்கு மாறுபடக் கூறுவாரா? என எண்ணுக. ஒப்புரவு ஆண்மையோடு நடக்க வேண்டும். அதனை, வினைத்திட்பம் அதிகாரத்தில் 'கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை' (663) என்று அறுதியிடக் காண்க. எனவே இறுதிவரை கேடில்லாத நிலை வேண்டும். ஒப்புரவு செய்வான் கெடின் ஒப்புரவாளர் இல்லாது போவர் எனவே தனது வலிமை அறிந்து தகுதி அறிந்து ஒப்புரவு செய்வதே வினைத் திட்பம், பொருள் செயல் வகை எனவே இங்கு வலியறிதல் அதிகாரக் குறளுக்கு அரும்பொருள் காண வேண்டின், ஒப்புரவறிதல், வினைத் திட்பம் போன்ற பல்வேறு அதிகாரப் பொருளையும் ஒத்திசைத்துக் காணுதல் வேண்டும். இன்றேல் நாம் முழுமை காணல் இயலாது. இத்தகைய ஒத்திசைந்த முழுமைப் பார்வை அற்ற நிறையில்லாதவர்களே திருக்குறள் புத்தச் சார்பு, சமணச் சார்பு என்று கூறித் தமது குறை மதியை வெளிப்படுத்தினர். திருக்குறளின் மெய்யியல் தனித்தமிழர் கண்ட மெய்யியல் என்பதை அறிவர் நெறி நின்று இறுதியில் இத்தொடர் நிறைவாக நிலை நிறுத்தும். எனவே திருக்குறளின் உண்மைப் பொருளை அறிவதால் உலகத் தமிழர் பெற்ற சீர் சிறப்புக்களையும் அருமை பெருமைகளையும் நாம் அறியலாம் என்பதையும் மறந்திடக் கூடாது.

(தொடரும்)

கல்லாடம் சுட்டும் இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில்

முனைவர் பி. ஆறுமுகம்
மதுரை

முன்னுரை

'இரை தேடுவதோடு இறைவனையும் தேடு' என்பர் சான்றோர். மதுரையின் மையப் பகுதியிலுள்ள அருள்மிகு இம்மையில் நன்மை தருவார் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனின் திசையை நோக்கி வணங்கினாலே அடியவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மை பல தருவார் என்ற நம்பிக்கை மதுரை மக்களிடம் இன்றும் உண்டு. இத்திருக்கோயிலில் அருள்மிகு இம்மையில் நன்மை தருவாரும் அருள்மிகு நடுவூர் நாயகியம்மனும் எழுந்தருளியுள்ளனர். இத்திருக்கோயில் பற்றிக் கல்லாடம் பலவாறாகப் புகழ்ந்து பேசுகிறது. அதுபற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கல்லாடம்

கல்லாடம் 'கி.பி. 9ஆம் நூற்றாண்டில் கல்லாடரால் எழுதப்பட்டது. இதில் மதுரைக் கோயில் பற்றியும் சிவபெருமான் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களில் 30 திருவிளையாடல்கள் மட்டும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவை வடமொழி நூலான 'சார சமுச்சயம்' என்ற நூலைத் தழுவியதாகும். சங்க காலத்தில் கல்லாடர் ஒருவர் இருந்தார். அவரும் கல்லாடம் எனும் பெயரில் நூலொன்று எழுதினார். மேலும் அவர் 'தொல்காப்பியம், புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குருநூறு போன்றவற்றிற்கு உரைகளும் எழுதியுள்ளார். அம்பர்கிழான், அருவந்தை, பொறையாற்றுக்கிழான் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் ஆகியோரைப் பற்றியும் பாடியுள்ளார். இதனை,

'கல்லாடர் செய்பவனுவற் கல்லாட நூறு நூல்
வல்லார் சங்கத்தில் வந்தருளிச் - சொல்லாயு

மாமதுரையீசர் மனமுவந்து கேட்டு முடி

தாமசைத்தார் நூறுதரம்''

எனவரும் வெண்பாவால் அறியலாம். 'கல்லாடம் பயின்றவனிடம் சொல்லாடாதே', 'கல்லாடம் பயின்றவனிடம் மல்லாடாதே' போன்ற பழமொழிகளும் உண்டு. 'கல்லாடதேவநாயனார் என்ற ஒரு சிவத்தொண்டர் இருந்தார்' என்றும், 'கல்லாடம்' என்ற பெயரில் கேரள நாட்டில் ஓர் ஊர் உள்ளது என்றும், கல்லாடர் என்ற பெயரில் 'நால்வர்' இருந்தனர் என்கிறார் மு. அருணாச்சலம். இனி கி.பி. 9ஆம் நூற்றாண்டில் எழுந்த கல்லாடம் பற்றி இவண் பேசப்படும்.

கல்லாடமும் அருள்மிகு நன்மைதருவார் திருக்கோயிலும்

பொதுவாகத் தமிழ் இலக்கியங்கள் காதலையும் வீரத்தையும் சிறப்பித்துப் பேசும். இங்குப் பேசப்பெறும் கல்லாடமும் அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் கோயில் இறைவனைச் சுட்டுமிடத்திலும் தலைவன் தலைவியின் காதல் ஒழுக்கத்தைப் பேசி அதன் மூலம் இறைவன் பெருமையைக் கூறுகிறது. தலைவன் ஒருவன் தலைவியின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு அவளின் பாதங்களை வருடியவாறே முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றினைக் கூறி அவள் மனத்தை மாற்ற முயல்கிறான். அதாவது, 'குரவம் போன்ற இருண்ட கூந்தலையுடைவளே ! ஒருநாள் நாமிருவரும் தீப்போலும் சுடுகின்ற பாலை நிலவழியில் செல்லுங்கால் அங்குள்ள பாலைநில மகளிர் தினைமாவும் சுரைக்குடுக்கையில் நீரும் கொடுக்க அவற்றை உண்டு அவர்கள் கொடுத்த அந்நீரைப் பருகி புல் வேய்ந்த சிறுகுடிசையில் தங்கினோம். அப்போது புலித்தோலைப் பாயாக விரித்துக் கொடுக்க நாம் அங்கு இன்புற்றிருந்தோம். அன்று நாம் நுகர்ந்த இன்பமே தெவிட்டாத இன்பம். அந்த இன்பத்திற்கு ஈடு இணை ஏதுமில்லை. அப்படி ஏதாவது ஈடு உண்டென்றால், அன்னை மீனாட்சியைத் திருமணம் செய்து மதுரை மூதூரின்கண் எழுந்தருளியுள்ள அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவாரின் நறுமணம் கமழும் இணையடிகளை நுகரும் இன்பத்தை வேண்டுமானால் கூறலாம். இதைக் காட்டிலும் வேறொரு இன்பத்தை அன்று நாம் நுகர்ந்த இன்பத்திற்கு ஈடாகக் கூற முடியாது என்கிறான். இதனை,

''குரவ....

நடைமலை யெயிற்றி னிடைதலை வைத்து

முயர்ந்தவின் பதற்கின் றுவம முண்டெனின்

முலைமூன் றணந்த சிறுநுதற் றிருவினை

யருமறை விதிக்கத் திருமணம் புணர்ந்து
மதிக்குலம் வாய்த்த மன்னவ னாகி
மேதினி புரக்கும் விதியுடை நன்னா
ணடுவூர் நகர்செய் தடுபவந் துடைக்கு
மருட்குறி நிறுத்தி யருச்சனை செய்த
தேவ நாயகன் கூடல்வா ழிறைவன்''

என்ற கல்லாடப் பாடல் வரிகள் மூலம் உணரலாம். மேலும் இந்நூலின் கண் திருக்கோவையாரின் 203ஆம் பாடலுக்கு எடுத்துக்காட்டுக் கூறும் பகுதியில் தோழி தலைவனிடம் நீ தலைவியைப் பாலைவழியில் அழைத்துச் சென்றாலும் தலைவி நின்னோடு வருவதால் அப்பாலை நிலமும் மருதநிலமே யாகும் (தண்சுரமும் வெண்சுரமாம்) என்கிறாள். அப்பொழுது, 'மலர்த் தேனிற் கலந்து வீசுகின்ற தென்றற்காற்று, பறந்தெழா நின்ற சிறகுகள் தீய்ந்திடுகின்ற கழுகுகள், பருந்துகள், குவளைமலர்கள், நாரைகள், கொக்குகள், வலிமை குறைந்த யானைகள், எருமைகள், முதலைகள், கிளைகள் வெந்து உலர்ந்த கள்ளிமரங்கள், நெற்றையுடைய வாகைமரங்கள், குருத்து விரிந்த நெற்பயிர், குலைகளையுடைய வாழை, இடைக்காடன் பொருட்டுக் கோயில் கொண்டருளிய வடமதுரை (பழைய சொக்கநாதர் கோயில்) திருநடுவூர் (இம்மையிலும் நன்மை தருவார் கோயில்) வெள்ளியம்பலம் (மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்) என்று மருதநில பாலைநிலக் காட்சிகளையும், மதுரையிலுள்ள திருக்கோயில்களின் இருப்பிடங்களையும் வருணனை செய்கிறார்.

''மதுமல ரளைந்த மலயக் காலே
யெழுசிறை தீயு மெருவையும் பருந்துங்
குவளையங் காட்டுக் குருகொடு புதாவே
வலியழி பகடு வாய்நீர்ச் செந்நாய்
தழைமடி மேதியும் பிணரிடங் கருமே
பட்டுலர் கள்ளி நெற்றுடை வாகை
சுருள்விரி சாலியுங் குலையரம் பையுமே
வடதிரு வால வாய்திரு நடுவூர்
வெள்ளி யம்பல நள்ளா றிந்திரை
பஞ்சவ னீச்சர மஞ்செழுத் தமைத்த
..

பணிப்பகை யூர்தி யருட்கொடி யிரண்டுடன்
முன்னும் பின்னு மதுக்கொள நிறைந்த
வருவியஞ் சார லொருபரங் குன்றஞ்
சூழ்கொள விருந்த கூடலம் பெருமான்
முழுதுற நிறைந்த லிருபதம் புகழார்
போம்வழி யெனுஞ் சுர மருத
மாமை யூர்தரு மணிநிறத் திவட்கே"

எனும் கல்லாடப் பாடல் வரிகள் மூலம் உணரலாம். இதன்கண் அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில் அமைந்திருந்த பகுதி 'திருநடுவூர்' என்று அழைக்கப்பட்டிருப்பதும், இத்திருக்கோயிலில் எழுந்தருளிய இறைவிக்கு 'நடுவூர் நாயகியம்மன்' என்ற பெயர் வழக்கத்திலிருப்பதும் நன்கு புலனாகின்றன. மதுரைப் பகுதியில் 'மேலமாத்தூர் - கீழமாத்தூர், மேலவெள்ளூர் - கீழவெள்ளூர், மேலக்குயில்குடி - கீழக்குயில்குடி, மேலஉரப்பனூர் - கீழஉரப்பனூர் போன்ற ஊர்கள் இருப்பதைப் போல அக்காலத்தவர் மதுரை மாநகர்ப் பகுதியில் மேலையூர் கீழையூர் நடுவூர் என்ற மூன்று ஊர்களை அடுத்தடுத்து அமைத்தனர். மதுரை பற்றிய பழைய இலக்கியங்களிலும், பழைய மதுரை வரைபடங்களிலும் மதுரைக் கோட்டைக்குள் மேலையூர் கீழையூர் நடுவூர் ஆகிய மூன்று ஊர்களும் இருந்ததற்கான தடயங்களைக் காணலாம். காலப்போக்கில் நடுவூரைத் தவிர மேலையூரும் கீழையூரும் வழக்கிழந்துவிட்டன' என்று தொல்லியல் அறிஞர் வேதாசலம் கூறுகிறார். வடதிருஆலவாய் என்ற சொல் பாடலில் வருவதால் தென்திருஆலவாய் என்ற திருக்கோயிலும் இருந்தது என்பது தெளிவு. ஆலவாய் என்பது அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலாகும். வடதிருஆலவாய் என்பது பழைய சொக்கநாதர் திருக்கோயிலாகும். இக்கோயில் அமைந்துள்ள பகுதி 'வடமதுரை' என்றும் அழைக்கப்பெறும். தென்திருஆலவாயில் என்பது இன்று தெற்குமாசி வீதியில் அமைந்துள்ள சிவன் கோயிலாகும்.

கல்லாடர் மருதம் மற்றும் பாலைநிலக் காட்சிகளைத் தலைவிக்கு ஒப்புமை காட்டிப் பேசினாலும் இன்றும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் அமைந்துள்ள பகுதி 'கடம்பவன சேத்திரம்' என்றே அழைக்கப்பட்டு வருவதைக் காணலாம். மதுரையில் பெரியார் பேருந்து நிலையப் பகுதி 'அகழி' என அழைக்கப்பட்டு வருவதையும், மதுரை

கூடலழகர் திருக்கோயில் அமைந்த பகுதி 'கதலி (வாழை) வனச் சேத்திரம்' என்று அழைக்கப்பட்டு வருவதையும், மதுரையில் ஆனைக்கல், ஆனையூர்ப் பகுதிகள் ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை என்று யானைகளை நினைவுப்படுத்துவதையும் நோக்கும் போது அக்கால மதுரை மாநகர்ப் பகுதியில் இயற்கையாக அமைந்திருந்த காட்சிகளைத் தான் அப்படியே கல்லாடர் தம் பாடலில் வருணித்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சிவலிங்கத் திருமேனியான அருள்மிகு இம்மையில் நன்மை தருவார் திருக்கோயில் இறைவனைக் கல்லாடம் 'அருட்குறி' என்ற சொல்லால் குறிக்கிறது.

கல்லாடம் 9ஆம் நூற்றாண்டில் பாடப்பட்டதாக இருக்கலாம் என்றால் அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில் சுமார் 1200 வருடங்களுக்கும் முற்பட்ட மிகப் பழமையான திருக்கோயில் எனத் துணியலாம்.

திருவாரூரிலும் கங்கைகொண்ட சோழபுரத்திலும் வடகயிலாசம் தென்கயிலாசம் என்று அமைந்துள்ளன. அதுபோல் மதுரையிலும் ஆலவாய் என்னும் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் வடபுறம் வடதிருஆலவாய் (பழைய சொக்கநாதர் கோயில்) என்ற திருக்கோயிலும் தென்புறம் தென்திருஆலவாய் (தெற்குமாசி வீதி சிவன் கோயில்) என்ற திருக்கோயிலும் அமைந்துள்ளன. இவற்றை நோக்கும்போது உளவியல் உத்தியான 'போலச் செய்தல்' முறை தமிழகக் கோயில்களில் பின்பற்றப்பட்டிருக்கின்றன என்ற செய்தி புலனாகிறது.

மதுரைக் கோட்டை

மதுரை மாநகரில் பாண்டியர் அமைத்த கோட்டை மதுரையை ஆண்ட விசுவநாதநாயக்கர் காலம் வரை இருந்துள்ளது. கோட்டையின் நான்கு திசைகளிலும் நான்கு வாசல்கள் இருந்துள்ளன. கோட்டை அழிந்தாலும் தெற்குவாசல், வடக்குவாசல், மேலவாசல், கீழவாசல் என்ற பெயர்கள் இன்றும் அதன் பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. பாண்டியரின் கோட்டை அழிவதற்கு முன்பு தெற்குவாசலில் ஆய்தம் தாங்கிய பாராக் காவலர்கள் காவல் காத்தது போலவும், கோட்டையின் அருகே கழுதைகளின் மேல் உப்பு மூட்டைகளை ஏற்றி வணிகர்கள் உப்பு வாணிகம் செய்தது

போலவும் டேனியல் என்பவர் படம் வரைந்துள்ளார். இவ்வரைபடம் சென்னைத் தலைமைச் செயலக வளாகத்தில் அமைந்துள்ள அரசு அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகரின் கோட்டைக்குள் மேலையூர், கீழையூர், நடுவூர், தெற்கூர், வடக்கூர் ஆகிய ஊர்கள் இருந்தன எனத் தெரியவருகிறது.

எனவே மதுரை மாநகரின் நுழைவுப் பகுதிகள் ஒரு காலத்தில் மேல் மதுரை (புகைவண்டி நிலையம் பகுதி) கீழ்மதுரை (புகைவண்டி நிலையம் பகுதி வடமதுரை (பழைய சொக்கநாதர் கோயில் பகுதி) தென்மதுரை (தென்திருஆலவாயன் கோயில் பகுதி) எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டன எனலாம். மதுரை மாநகரின் திருக்கோயில்கள் ஆலவாய் (மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்) வடதிருஆலவாய் (பழைய சொக்கநாதர் கோயில்) தென்திருஆலவாய் (தெற்குமாசி வீதியிலுள்ள சிவன்கோயில்) எனவும் பெயரிட்டு அழைக்கப்பட்டன. இப்படிக் காலந்தோறும் மதுரை மாநகர் பல பெயர்களைத் தாங்கி வந்துள்ளது.

முடிவுரை

கோயில் நகரமாம் மதுரையில் எழுந்தருளியுள்ள அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயிலில் எழுந்தருளிய இறைவனின் திசைநோக்கி வணங்கினாலே அவன் இம்மை மறுமைப் பிறவிகளிலும் இன்பம் தருவான் என்பதும், மதுரையின் நடுவில் எழுந்த கோயிலில் எழுந்தருளிய காரணத்தால் இறைவி 'நடுவூர் நாயகி' என அழைக்கப்பட்டிருப்பதும் தெரியவருகிறது. மேலும், ஆலவாய் அண்ணலின் திருக்கோயிலின் நான்கு திக்குகளிலும் நான்கு கோயில்கள் அமைக்கப்பட்டிருப்பதும் தெரியவருகிறது. 'கைப்புத் தின்னாதானைக் கட்டி தோய்த்து உண்பித்தாற்போல'ப் பக்தி இலக்கியங்களில் அகப்பொருள் மரபு பேசப்படுவதன் மூலம் பக்தியை வளர்க்கும் பான்மையினைச் சமயாச்சாரியார்கள் கொண்டிருந்தனர் என்பதும் தெரிய வருகிறது.

செய்தி ஊடகங்களும் மொழிபெயர்ப்பும்

முனைவர் வீ. ரேணுகா தேவி, மதுரை

(சூலை மாத இதழ் தொடர்ச்சி)

ஒலிபெயர்ப்பின் இன்றியமையாமை

பிற மொழியில் உள்ள சொற்களை மொழிபெயர்க்க இயலாத நிலையில் அச் சொல்லைப் பெறும் மொழியில் ஒலிபெயர்த்தல் தேவையாகின்றது. ஆனால், தமிழ் விளம்பரங்களில் மொழிபெயர்க்க இயலும் நிலையிலும் பெரும்பாலும் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

பிற மொழியில் குறிப்பிடப்பட்டுள்ள ஊரின் பெயரையோ அல்லது புதிய கண்டுபிடிப்புகளையோ, தாய் மொழியில் குறிப்பிடும் பொழுது அம்மொழிச் சொல்லை அதே ஒலி அமைப்பில் எழுதுவது தேவை ஆகும்.

உலக மயமாக்கலின் காரணமாக மேலை நாட்டின் உற்பத்திப் பொருள்களும், அறிவியல் கண்டுபிடிப்புகளும், பண்பாட்டு மாற்றங்களும் ஊடகங்களில் வழி இறக்குமதிச் செய்யப்படுவதால் ஏராளமான கார்களின் பெயர்கள் (போர்டு ஐ கான், செவர்லெட், பீட், மான்ஸா, ஆல்தோ, ஐ10, ஐ20, ஏ-ஸ்டார்) அறிவியில் கண்டுபிடிப்புகள் (மிக்ஸி, கிரைண்டர், குக்கர், செல்போன், கம்ப்யூட்டர், இன்டர்நெட்)

உணவு வகைகள்

பீட்ஸா, ஸன்பீஸ்ட், சாக்லேட், நூடுல்ஸ், பூடுல்ஸ்

உடைகள்

சுடிதார், பேண்ட், ஜீன்ஸ், குர்தா, சர்ட், செகண்டரி சிக்கன், மெக் டொனால்ட், பில்ஸ்பெரி, காராமில்க், காட்பரீஸ், மிண்ட்.

அழகு சாதனங்கள்

பேரெவர், பேர் அண்ட் லவ்வி, கார்னியர் ப்ரூட்டாங்ஸ் போன்றன ஒலி பெயர்ப்பட்டே எழுதப்படுகின்றன. சில சொற்களுக்குச் சரியான பொருத்தமான சொற்கள் கிடைப்பது இல்லை. அப்போது ஒலிபெயர்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாய்ஸ் ரைஸ்ரர், ஆன்லைன், ஆப் லைன், தெர்மோ ஸ்டார்ட், செட்-டாப். ஆனால், விளம்பரங்களில் பொருத்தமான சொற்கள் இருந்த போதும் ஒலிபெயர்ப்பு சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

டைட்டில் பாடல்	தலைப்பு பாடல்
ஹேர் ஆயில்	முடி எண்ணெய்
டூத் பேஸ்ட்	பற்பசை
லோக்கல் கால்கள்	உள்ளூர் அழைப்புகள்
ஹேர் ஃபால்	முடி உதிர்தல்
ஃபீரி கிப்ட்	இலவச பரிசு
குக்கிங் அண்ட் சர்வீசிங் லும்	சமைப்பதிலும் பரிமாறுவதிலும்
உங்க குவாலிட்டியை	உங்க தரத்தை

பிற மொழி ஒலிகளுக்கு ஈடான தமிழ்ச் சொற்கள் இல்லை என்ற நிலையில், அம்மொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளுதல் தமிழை வளப்படுத்துவதாக அமையும்.

பீட்ஸா, நூடுல்ஸ், பூடுல்ஸ், மிக்ஸி

கருத்தை விளக்குவதற்காக ஒலி, சொல், சொற்றொடர் ஆகிய மூன்றையும் பெயர்த்து எழுதுவதைப் போல, குறிப்பிட்ட இடத்தின் பெயரையும், அறிஞரின் பெயரையும் ஒலி பெயர்த்து எழுதுவதால் மட்டுமே அதன் உண்மைத் தன்மை காப்பாற்றப்படும். இக்காலத்தில் புதியதாகக் கண்டுபிடிக்கப்படும் அறிவியல் சாதனங்களையும், சொற்களையும் உடனுக்குடன் மொழிபெயர்த்து வெளியிடுவது அரிது. ஆனால் ஒலிபெயர்த்தல் எளிது. கலைச் சொற்கள் உருவாக்கப்பட்ட பின்னரும் ஒலிபெயர்ப்புச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கம்ப்யூட்டர்	கணினி
மொபைல்	கைபேசி
டூத்பேஸ்ட்	பற்பசை
கிரிக்கெட்	மட்டைபந்து
லைவ்	நேரலை

இவ்வகையான ஒலிபெயர்ப்புகள் தவிர்க்கப்படலாம். விளம்பரங்களில் தமிழ்ச் சொற்கள் கூட ஒலிபெயர்க்கப்பட்டு எழுதப்படும் நிலை காணப்படுகின்றது.

Amman - TRY கம்பிகள்
Aachi மசாலா

சில நேரங்களில் விளம்பரங்களில் பயன்படுத்தபடும் ஒலிபெயர்ப்புகள் புரிதலில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. தனிநபர் ஓய்வூதியம் - அன்னியூட்ற பாலிசிக்கு பணம் வழங்குவது சுலபமாக்கப்பட்டுவிட்டது. உங்கள் அன்னியூட்டி தொடங்கப் போகின்றது என்றால் தற்போதுள்ள அன்னியூட்டண்டுகளுக்கு. மேற்கண்ட எல்.ஐ.சி. வாடிக்கையாளர் விழிப்புணர்வு பிரச்சாரத்தில் உள்ள ஒலிபெயர்ப்புச் சொல்லான அன்னியூட்டி பாலிசி என்பது பெரும்பாலான நுகர்வோருக்கு எதைச் சொல்லுகின்றது என்னும் புரிதலை ஏற்படுத்தவில்லை.

முடிவுரை

விளம்பரங்களின் மொழி ஆங்கிலம் கலந்த மொழியாகவே அமைந்துள்ளது. ஆங்கிலச் சொற்களில் பெரும்பாலானவை ஒலிபெயர்ப்பு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாகத் தமிழ் மொழியின் கட்டமைப்பில் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்கத் தேவையான இடங்களில் மட்டுமே ஒலிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும். மொழிபெயர்ப்புச் சொற்களையே பயன்படுத்த வேண்டும். ஒலி பெயர்ப்பினால் ஏற்படும் பொருள் மயக்கத்தைத் தவிர்க்க வேண்டும். சில ஒலிபெயர்ப்புச் சொற்களை நுகர்வோர் பலராலும் புரிந்து கொள்ள இயலவில்லை. கருத்துத் தெளிவிற்கு ஒலிபெயர்ப்பை விளம்பரங்கள் பயன்படுத்தினால் விளம்பரங்களைப் புரிந்து கொள்வது எளிமையாக இருக்கும். விளம்பரங்களின் நோக்கமும் நிறைவேறும்.

குறிப்பு - மொழி பெயர்ப்புத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூரில் செய்தி ஊடகங்களும் மொழி பெயர்ப்பு என்னும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் வாசிக்கப் பெற்ற கட்டுரை.

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ்,** 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 September 2011 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

2011 - 2012ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

- ✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

From
SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.